# திருக்குறள் - ஐம்பது

பதவுரை விளக்க உரைகளுடன்

முதற் பாகம்

(1-ஆம் பாரம் அல்லது 6-வது வகுப்புக் குரியது)

[1948-ல் வெளிவந்த அரசினர் பாடத் திட்டத்திற் கமைய வெளியிடப்பட்டுள்ளது.]

CONNEMARA PUBLIC LIBRARY
29 JAN 1956
MADRAS

[*Approved for Class Libraries—Vide Page 121, Part II, Consolidated List dated 19th May 1954.*]

பதிப்பாளர்:
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு : : சென்னை 1

பதிப்புரிமை] 1954 [விலை அணா 3

# திருவள்ளுவர்

வள்ளுவன் என்பது பழங்காலத்து அரசனது கருமத் தலைவருள் ஒருவனுக்கு வழங்கிய உத்தியோகப் பெயர். இவனுடைய தொழில், யானையின் பிடர்மீது இருந்து அரச கட்டளையை மக்களுக்கு விளம்பரப்படுத்துதல். திருக்குறளைச் செய்த ஆசிரியர் தமிழ் அரசன் ஒருவனிடம் வள்ளுவ உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய இயற்பெயர் மறக்கப்பட்டது. ஆகவே, அவர் வள்ளுவர் என்னும் உத்தியோகப் பெயரால் அறியப்பட்டார். வள்ளுவர் என்பது கணக்கன் என்பது போன்ற வழக்கு. பிற்காலத்தில் வள்ளுவன் என்னும் பெயர் பறைக்குலத்தவரைக் குறிக்க வழங்கிற்று. ஆகவே, அவரைப் பறைக்குலத்தவரென்று பிற்காலத்தவர் தப்பாகக் கருதலாயினர். வள்ளுவர் செய்த நூலுக்கு இடப்பட்ட பெயர் யாது என அறியப்படவில்லை. அந்நூல் குறள் வெண்பாவினால் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அது குறள் என வழங்கப்பட்டு வருகின்றது. திரு என்பது உயர்வு கருதி இட்டு வழங்கப்படும் சிறப்புச் சொல். திருக்குறளைக் கொண்டு அவர் சமயத்தை அறியமுடியவில்லை. வினை, உயிர், பிறப்பு, கடவுள், தீவினை, அறம் போன்ற தத்துவக் கருத்துக்களைப்பற்றிப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் வரும் தனித் தமிழ்ச் சொற்களைக் கொண்டு நன்கு அறியலாம். இக் கருத்துக்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. பழந்தமிழர் சமயமும் இவ்வகையினதே. திருவள்ளுவர் சைவ மதத்தினர் எனக்கொண்டு அவருடைய வடிவை உருத்திராக்க வடங்கள் அணிந்தவராகவும் திருநீற்றுப் பூச்சுடையவராகவும் அமைத்துக் காட்டுவர் சிலர். சங்ககாலத்தில் உருத்திராக்க வடம் பூணும் வழக்கு காணப்படவில்லை.

திருவள்ளுவர் இற்றைக்கு 1,800 ஆண்டுகளின் முன் வாழ்ந்தார். அவரது பிறப்பிடம் மதுரை எனத் திருவள்ளுவ மாலைச் செய்யுளொன்றால் அறியப்படுகின்றது. திருவள்ளுவரைப் பற்றிய ஏனைய வரலாறுகளையும், அவற்றின் ஆராய்ச்சி முடிவுகளையும் திருவள்ளுவர் என்னும் எமது விரிந்த நூலிற் காண்க.

ந. சி. க.

# திருக்குறள்—ஐம்பது

## முதற் பாகம்

29 JAN 1956

### கடவுள் உலகுக்கு முதல்வர்

1. அகரம் முதல எழுத்துஎல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(வசன நடை): எழுத்து எல்லாம் அகரமுதல; உலகு ஆதிபகவன் முதற்று.

(பத உரை): எழுத்து எல்லாம் - எழுத்துக்களெல்லாம்; அகரம் முதல-அகர ஒலியை முதலாக உடையன; (அதுபோல) உலகு-உலகமானது; ஆதிபகவன் முதற்று-கடவுளாகிய முதல்வனை உடையது.

உலகம் என்பது உயிர்களை உணர்த்தும். ஏகாரம்-தேற்றம்.

எழுத்துக்கள் எல்லாம் அகர ஒலியை முதலாக உடையனபோல் உயிர்கள் எல்லாம் கடவுளை முதலாக உடையன.

### தருமமே சிறந்த செல்வம்

2. அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

(வ - ந.): (ஒருவனுக்கு) அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை.

(ப - உ): அறத்தின் ஊங்கு - (ஒருவனுக்கு) தருமம் செய்தலின் மேம்பட்ட; ஆக்கமும் - பெருக்கத்தைத் தருவதும்; இல்லை இல்லையாகும்; அதனை - அத்தருமத்தை; மறத்தலின் ஊங்கு - மறந்து செய்யாது விடுதலின் மேற்பட்ட; கேடு இல்லை - கேடு தருவதும் இல்லை.

ஆக்கம் - மேல் மேல் வளர்வது.

ஒருவனுக்குத் தருமஞ் செய்தலைவிட மேலான நன்மை யாதும் இல்லை; அத்தருமத்தை மறந்து செய்யாது விடுதலின் மேலான கேட்டைத் தருவதும் வேறு இல்லை.

மகன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு

3. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி ' இவன்தந்தை
என்நோற்றான் கொல்!' எனும் சொல்.

(வ - ந.): தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி, இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல்.

(ப - உ.): தந்தைக்கு - (தன்னைக் கல்வியுடையனாக்கிய) தகப்பனுக்கு; மகன் - புதல்வன்; ஆற்றும் உதவி - செய்யும் கைம்மாறானது; (தன் அறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்) இவன் தந்தை - இவனுடைய தகப்பன்; (இவனைப் பெறுதற்கு) என் நோற்றான்கொல் - என்ன (மேலான) தவத்தைச் செய்தானோ; எனும் சொல் - என்கின்ற சொல்லை (உண்டாக்குதலாம்).

தன்னைக் கல்வியுடையனாக்கிய தகப்பனுக்கு மகன் செய்யும் பதில் உபகாரம், தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர் 'இவனுடைய தகப்பன் இவனைப பெறுதற்கு என்ன தவத்தைச் செய்தானோ?' என்று சொல்லும் சொல்லை உண்டாக்குதலாம்

அறிவுடையோர் புகழுமாறு நல்லொழுக்கமுடையவனாக இருத்தல் வேண்டும்.

அன்புடையார் தமது உடலையும் பிறர்பொருட்டுக் கொடுப்பர்

4. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

(வ - ந.): அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர். அன்பு உடையார் என்பும் பிறர்க்கு உரியர்.

(ப - உ.): அன்பு இலார் - (உயிர்களிடத்து) அன்பு இல்லாதார்; (பிறருக்குப் பயன்படாமையால்) எல்லாம் தமக்கு உரியர் - எல்லாப் பொருள்களாலும் தமக்கே உரியவராவர்; அன்புடையார் - அன்பை உடையவர்;

(பொருள்களால் மட்டுமல்லாமல்) என்பும் பிறர்க்கு உரியர் - (தம்) உடம்பாலும் மற்றவருக்கு உரியவராவர்.

அன்பில்லாதவர் தமது பொருளைத் தாமே பயன் படுத்துவர்; அன்புடையவர் தமது பொருளை மட்டு மன்று, தமது உடலையும் பிறருக்கு உரிமையாக்குவர்.

தம் உடம்பு அழிவதாயினும் பிறர்க்கு உதவுவர்.

இல்வாழ்வது விருந்தினரை உபசரிப்பதற்கு

5. இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

(வ - ந): இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு.

(ப - உ): (மனைவியோடு காட்டிற்குச் சென்று தவம் செய்யாமல்) இல் இருந்து - வீட்டிலே இருந்து; ஓம்பி - (பொருள்களைக்) காப்பாற்றி; வாழ்வது எல்லாம் - வாழும் செய்கையெல்லாம்; விருந்து ஓம்பி - விருந்தினரை உப சரித்து; வேளாண்மை செய்தல் பொருட்டு - உபகா ரத்தை (அவருக்குச்) செய்யும் பொருட்டாகும்.

ஒருவன் காட்டிற்குச் சென்று தவம்செய்யாது வீட்டிலிருந்து பொருளைக் காப்பாற்றி வாழ்வது விருந் தினரை உபசரித்தற்காகவே.

மருந்தேயாயினும் விருந்தோடுண்

6. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.

(வ - ந): (உண்பது) சாவா மருந்து எனினும் விருந்து புறத்தது ஆக தான் உண்டல் வேண்டல் பாற்று அன்று.

(ப - உ): (உண்ணப்படும் பொருள்) சாவாமருந்து எனினும் - அமிர்தமாயினும்; விருந்து புறத்தது ஆக - (தன்னை நோக்கி வந்த) விருந்தினர் (தன் வீட்டின்) புறத் திருக்க; தான் உண்டல் - தான் உண்ணுதல்; வேண்டல் பாற்று அன்று - விரும்பப்படும் தன்மையுடையதன்று.

உண்பது மரணத்தை நீக்கும் அமிர்தமாயினும், தன்னிடத்தே வந்த விருந்தினர் வீட்டின் வெளியேயிருக்க, அதனை ஒருவன் உண்ணுதல் முறைமையாகாது.

### முகமலர்ந்து இன்சொல் கூறுதலே அறம்

7. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்.

(வ - ந): அறம், முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தான் ஆம் இன்சொல்லினதே.

(ப - உ): அறம்-தருமமாவது; முகத்தான் அமர்ந்து-(விருந்தினரைக் கண்டபொழுதே) முகத்தால் விரும்பி; இனிது நோக்கி - இனிதாகப் பார்த்து; (பின்வந்து சேர்ந்தவிடத்து) அகத்தான் ஆம் இன் சொல்லினதே - மனமார்ந்த இனிய சொற்களைச் சொல்லுதலே.

தருமம் என்று சொல்லப்படுவது விருந்தினரைத் தூரத்தில் கண்டவுடன் முகம் மலர்ந்து பார்த்து, பின் அவர் வந்தவிடத்து மனத்தில் எழுகின்ற அன்பு உணர்ச்சியினால் இனிய சொற்களைச் சொல்லுதலாகும்.

### நன்றி மறவேல்

8. நன்றி மறப்பது நன்றுஅன்று; நன்றுஅல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

(வ - ந), நன்றி மறப்பது நன்று அன்று; நன்று அல்லது அன்றே மறப்பது நன்று.

(ப - உ): நன்றி - (ஒருவன் முன் செய்த) நன்மையை; மறப்பது நன்று அன்று - மறந்துவிடுதல் (ஒருவனுக்கு) தருமம் அன்று; நன்று அல்லது - (அவன் செய்த) தீமையை; அன்றே மறப்பது நன்று - அப்பொழுதே மறந்துவிடுதல் அறமாகும்.

ஒருவன் செய்த நன்மையை ஒருபோதும் மறத்தலாகாது; அவன் செய்த தீமையை உடனே மறத்தல் அறமாகும்.

தராசு கோல்போல நடுநிற்றல் அறிவுடையோர்க்கு அழகு

9. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்அமைந்து ஒரு
கோடாமை சான்றோர்க்கு அணி. [பால்

(வ - ந.) சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி.

(ப - உ): சமன்செய்து - (முன்னே தன்னைச்) சமனைச் செய்து; சீர்தூக்கும் கோல்போல் - (பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவு செய்வதாகிய தராசுக்கோல் போல; அமைந்து - (தன்மைகளால்) நிறைந்து; ஒருபால் கோடாமை-ஒரு பக்கம் சாயாதிருத்தல்; சான்றோர்க்கு அணி - (அறிவால்) நிறைந்தோர்க்கு அழகாகும்.

தராசுக் கோலைப்போல் நடுநிற்பது அறிவுடையோர்க்குச் சிறப்பு.

அடக்கம் உயர்வு தரும்

10. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

(வ - ந.): அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும்.

(ப - உ): அடக்கம் - (ஒருவனை) அடக்கமாகிய குணம்; அமரருள் உய்க்கும் - தேவருலகில் கொண்டு போய்விடும்; அடங்காமை - அடங்காமையாகிய (தீய) குணம்; ஆர் இருள் உய்த்துவிடும் - பொறுத்தற்கரிய நரகத்தில் செலுத்திவிடும்.

அடக்கமாகிய குணம், ஒருவனைத் தேவர் மத்தியில் கொண்டுபோய் விடும்; அடங்காமை என்னும் குணம் நரகத்தில் தள்ளிவிடும்.

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது

11. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

(வ - ந) ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

(ப - உ): ஒழுக்கம் - நல்ல ஒழுக்கம்: விழுப்பம் தரலான் - (எல்லாருக்கும்) சிறப்பைக் கொடுத்தலால்; ஒழுக்கம் - அவ்வொழுக்கம்; உயிரினும் ஓம்பப்படும் - உயிரைவிட அதிக மேன்மையாகப் பாதுகாக்கப்படும்.

ஒழுக்கம் எல்லாருக்கும் சிறப்பு அளித்தலால் உயிரினும் சிறந்ததாக அதனைக் காத்தல் வேண்டும்.

பொறுமையே சிறந்த அறம்

12. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

(வ - ந.): அகழ்வாரை தாங்கும் நிலம்போல தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை.

(ப - உ): அகழ்வாரை - (தன்னைத்) தோண்டுகின்றவரை; தாங்கும் நிலம்போல - (விழாமல்) சுமக்கின்ற பூமியைப்போல; தம்மை - தங்களை; இகழ்வார் பொறுத்தல் தலை-நிந்திப்பவரைப் பொறுத்திருத்தல் முதன்மையாகிய அறமாகும்.

தன்னைத் தோண்டுகின்றவரை விழாமல் தாங்கும் நிலம்போலத் தம்மை அவமதிப்பவரைப் பொறுத்தல் சிறந்த அறமாகும்.

பொறாமை யின்மையே சிறந்த ஒழுக்க நெறி

13. ஒழுக்குஆறுக் கொள்க ஒருவன் தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

(வ - ந): ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு ஒழுக்கு ஆறு ஆக கொள்க.

(ப - உ): ஒருவன் தன் நெஞ்சத்து-ஒருவன் தனது மனத்தின்கண்; அழுக்காறு இலாத இயல்பு - பொறாமையாகிய குற்றம் இல்லாத தன்மையை; ஒழுக்கு ஆறு ஆக கொள்க - (தனக்குச் சொல்லப்பட்ட) ஒழுக்கத்தினது வழியாகக் கொள்ளக் கடவன்.

ஒருவன் தன் மனதில் பொறுமை என்னும் குற்றமில்லாத இயல்பினைத் தனக்கோதிய ஒழுக்க நெறியாகக் கொள்வானாகை.

மற்றவரிடம் குற்றம் காணுமுன் உனது குற்றத்தைக் காண்

14. ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

(வ - ந.): ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின் மன்னும் உயிர்க்கு தீது உண்டோ?

(ப - உ.): ஏதிலார் குற்றம்போல்-அயலாரின் குற்றத்தைக் காண்பதுபோல; தம் குற்றம்-தமது குற்றத்தையும்; காண்கிற்பின்-காண்பாராயின்; மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - (அவரது) நிலைபெற்ற உயிருக்கு (வருவதொரு) துன்பம் உண்டோ?

பிறரைப் புறங் கூறுவோர் தமது குற்றத்தைக் காண்பாராயின் அவர்க்குத் தீமை உண்டாகமாட்டது.

புறங்கூறுதல் பெரிய குற்றம். ஆதலின் அதைச் செய்தலாகாது.

தீயசெயல்கள் தீயினும் கொடியவை

15. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

(வ - ந.): தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்.

(ப - உ): தீயவை -- (இன்பத்தின் பொருட்டுச் செய்யும்) தீவினைகள்; தீய பயத்தலால்-(பின்பு) துன்பங்களைத் தருதலால்; தீயவை - (அப்படிப்பட்ட) தீவினைகள்; தீயினும் அஞ்சப்படும் - தீயினும் அதிகமாக (ஒருவனால்) பயப்படப்படும்.

தனக்கு இன்பம் கருதிச் செய்யப்படும் தீவினைகள் பின் தனக்கே துன்பம் தருதலால் அவை தீயைவிட அஞ்சப்படும்.

நெருப்பு விலகியிருந்தால் சுடாது தீவினை தன்னைச் செய்தவனை விடாது தொடர்ந்து துன்பம் செய்யும்.

அறிவாளியின் செல்வம் ஊரார் நீருண்ணும் கேணி

16. ஊருணி நீர்நிறைத் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு.

(வ - ந.): உலகு அவாம் பேர் அறிவு ஆளன் திரு, ஊருணி நீர் நிறைந்த அற்று.

(ப - உ): உலகு அவாம் - உலக நடையை விரும்பிச் செய்யும்; பேர் அறிவு ஆளன் திரு-பெரிய அறிவினையுடையவனது செல்வம்; ஊருணி - ஊரில் வாழ்வார் நீருண்ணும் குளமானது; நீர் நிறைந்த அற்று - நீரினால் நிறைந்தது போலும்.

உலகத்தார் நன்றெனக் கொண்டவற்றை விரும்பிச் செய்யும் அறிவாளியின் செல்வம் ஊரில் வாழ்வார் தண்ணீருண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போலும். (பலர்க்கும் எளிதில் பயன்படும்.)

ஏற்ப திகழ்ச்சி

17. நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

(வ - ந.): கொளல் நல்லாறு எனினும் தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று.

(ப - உ): கொளல் - இரத்தல்; நல்ஆறு எனினும் - (மேலுலகத்துக்கு) நல்வழி என்பவர் உளராயினும்; தீது- அது தீயது; மேல் உலகம் - (கொடுத்தவர்க்கு) அம் மேலுலகத்தை யடைதல்; இல் எனினும் - இல்லை என்பவர் உளராயினும்; ஈதலே நன்று - கொடுத்தலே நல்லது.

இரத்தல் வானுலகத்துக்குச் செல்லும் வழி எனக் கூறுபவர் உளராயினும் இரத்தல் தீது; ஈவார்க்கு அவ்வுலகம் கிட்டாதெனக் கூறுவாருளராயினும் ஈதலே நன்று.

தோன்றிற் புகழொடு தோன்றுக

18. தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

(வ - ந.): தோன்றின் புகழொடு தோன்றுக; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று.

(ப - உ.): தோன்றின் - (மக்களாய்) பிறக்கின்; புகழொடு தோன்றுக - புகழ் தோன்றுதற்கு ஏதுவாகிய குணங்களோடு பிறக்க; அஃது இலார் - அக்குணங்கள் இல்லாதார்; தோன்றலின் தோன்றாமை நன்று - (மக்களாய்ப்) பிறத்தலின் பிறவாதிருத்தல் நல்லது.

மனிதராய்ப் பிறக்கில் புகழ் தோன்றுதற்கு ஏதுவாகிய குணங்களோடு பிறக்கவேண்டும்; அக்குணங்களில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் பிறவாதிருத்தல் நல்லது.

### மெய்மையே அகத்தழுக்கைப் போக்கும்

**19.** புறத்தூய்மை நீரான் அமையும்; அகத்தூய்மை
வாய்மையான் கணப் படும்.

(வ - ந.): புறம் தூய்மை நீரான் அமையும்; அகம் தூய்மை வாய்மையான் காணப்படும்.

(ப - உ.): புறம் தூய்மை - (ஒருவனுக்கு) உடம்பு பரிசுத்தமாகும் தன்மை; நீரான் அமையும் - நீரினால் உண்டாகும்; (அதுபோல) அகம் தூய்மை - மனம் பரிசுத்தமாகும் தன்மை; வாய்மையான் காணப்படும் - உண்மையினால் காணப்படும்.

ஒருவனுக்கு உடலின் சுத்தம் நீராடுதலால் உண்டாகும்; அதுபோல மனத்தின் சுத்தம் மெய் பேசுதலால் உண்டாகும்.

### கோபமே கொடிய பகை

**20.** தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

(வ - ந.): தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும்.

(ப - உ.): தன்னைத்தான் காக்கின் - (துன்பம் உண்டாகாமல்) தன்னைத்தான் காக்க நினைத்தானாகில்; சினம் காக்க - (தன் மனத்திலே) கோபம் வராமல் காப்பானாக;

காவாக்கால் - காவாணுயின் ; சினம் - அக்கோபம்; தன்னேயே கொல்லும் - அவனேயே கெடுக்கும் ; கடுந் துன்பங்களே அடைவிக்கும்.

கொல்லும் என்பது துன்பமிகுதியை உணர்த்தி நின்றது.

ஒருவன் தன்னேத்தான் துன்பம் எய்தாமல் காக்க நினேத்தாணுயின் தன் மனத்தில் கோபம் எழாமல் காப்பாணுக ; காவாணுனல், அக்கோபம் அவனேயே கெடுக்கும்; மிகுந்த துன்பங்களே வருவிக்கும்.

பிறர்க்குத் துன்பம் செய்தலால் செல்வம் கிடைக்கு
மாயினும் அதனேச் செய்யார் அறிவுடையார்

21. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்ருர் கோள்.

(வ - ந): சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் இன்னு பிறர்க்கு செய்யாமை மாசற்ருர் கோள்.

(ப - உ.): சிறப்பு - (யோகமாகிய) சிறப்பினுல்; ஈனும் - தரப்படுவதாகிய ; செல்வம் பெறினும் - அணிமா முதலிய செல்வங்களேப் பெறலாமாயினும்; பிறர்க்கு இன்னு செய்யாமை - மற்றவர்க்குத் துன்பஞ் செய்யாதிருத்தல்; மாசு அற்ருர் கோள் - குற்றமற்ற பெரியார் கொள்கையாகும்.

யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா முதலிய செல்வங்களேப் பிறர்க்குத் துன்பஞ்செய்து பெறலாமாயினும், அதனேச் செய்யாமையே மனம் தூய்மையுடையவரது கொள்கையாகும்.

அரசருக்குள்ள சிறப்புடைக் குணங்கள் மூன்று

22. தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

(வ - ந): நிலன் ஆள்பவர்க்கு தூங்காமை கல்வி துணிவு உடைமை இம்மூன்றும் நீங்கா.

(ப - உ.): நிலன் ஆள்பவர்க்கு - உலகத்தை ஆட்சி செய்கின்றவருக்கு; தூங்காமை - (செய்ய வேண்டிய

காரியங்களில்) விரைவுடைமையும்; கல்வி - (அவற்றை அறிதற்கு ஏற்ற) கல்வி உடைமையும்; துணிவு உடைமை- ஆண்மை உடைமையும்; இம் மூன்றும் - (ஆகிய) இம் மூன்று குணங்களும்; நீங்கா - (ஒருபோதும்) நீங்காவாம்.

உலகை ஆளுகின்ற அரசருக்கு ஒரு காரியத்தை விரைந்து செய்தல், கல்வி, தைரியம் என்னும் இம்மூன்று குணங்களும் ஒருபோதும் நீங்கமாட்டா.

### கற்றபடி ஒழுகு

23. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(வ - ந): கற்பவை கசடு அற கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க

(ப - உ.): கற்பவை - (ஒருவன்) பயிலவேண்டிய நூல்களை; கசடு அற கற்க-பழுதற (நன்றாகக்) கற்பானாக; கற்றபின்-(அப்படிப்) படித்த பிறகு; அதற்குத் தக நிற்க- அக் கல்விக்குத் தகுதியாக (அவற்றில் சொல்லப்பட்ட வழியில்) நிற்கக் கடவன்.

ஒருவன் படிக்கவேண்டிய நூல்களை நன்றாகக் கற்கக் கடவன்; அவ்வாறு கற்றால் அக்கல்விக்கு ஏற்ப அவை சொல்லுகிற நல்ல நெறியில் நிற்கக் கடவன்.

### எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

24. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

(வ - ந.): எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ் விரண்டும் வாழும் உயிர்க்கு கண் என்ப.

(ப - உ.): எண் என்ப - கணக்கு என்று சொல்லப் படுவதும்; ஏனை எழுத்து என்ப - மற்றை எழுத்து என்று சொல்லப்படுவதும் ஆகிய; இவ்விரண்டும் - இக் கல்விகள் இரண்டும்; வாழும் உயிர்க்கு கண் என்ப - வாழ்கின்ற மக்களுக்குக் கண்ணாகும் என்று சொல்லுவர் (அறிவுடையோர்).

எண், எழுத்து என்று சொல்லு மிரண்டனையும், அறிவுடையோர் உயிர்களுக்குக் கண் என்று சொல்லுவர்.

கல்லாதார் மேற்பிறந்தும் மேலல்லர்

25. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு.

(வ - ந.): கல்லாதார் மேற்பிறந்தா ராயினும், கீழ்பிறந்தும் கற்றார் அனைத்து பாடு இலர்.

(ப - உ.): கல்லாதார் - கல்வி கல்லாதவர்; மேல் பிறந்தார் ஆயினும் - உயர்ந்த சாதியில் பிறந்தாராயினும்; கீழ்ப் பிறந்தும் கற்றார் அனைத்து -கீழ் சாதியிற் பிறந்திருந்தும் கற்றவரது பெருமை யளவினதாகிய; பாடு - பெருமையை; இலர் - உடையவராகார்.

கல்லாதார், உயர்ந்த சாதியிற் பிறந்தாராயினும் தாழ்ந்த சாதியிற் பிறந்தும் கற்றவரைப்போல் பெருமை இல்லாதவராவர்.

கேள்விச் செல்வம் செல்வத்துள் தலை

26. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

(வ - ந.): செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.

(ப - உ.): செல்வத்துள் செல்வம் - (ஒருவனுக்குச்) செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த செல்வம்; செவிச் செல்வம் - கேள்வியால் வரும் செல்வமாகும்; அச்செல்வம் - அக்கேள்விச் செல்வமானது; செல்வத்துள் எல்லாம் தலை - (மற்றச்) செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைமையானது.

கேள்விச் செல்வம் பிற செல்வங்களெல்லாவற்றினும் தலைமையானதாதலால், ஒருவருக்குச் சிறப்புடைய செல்வமாவது கேள்விச் செல்வமே.

அறிவுடையார் எல்லாமுடையார்

27. அறிவுடையார் எல்லாம் உடையர்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

(வ - ந.): அறிவுடையார் எல்லாம் உடையர்; அறிவிலார் என் உடையரேனும் இலர்.

(ப - உ): அறிவு உடையார் - அறிவை உடையவர்; எல்லாம் உடையர் - வேறொன்றும் இல்லாதவராயிருந்தாலும்) எல்லாமுடையவராவார்; அறிவு இலார் - அறிவில்லாதவர்; என் உடையரேனும் இலர் - எல்லாம் உடையரா யிருந்தாலும் (ஒன்றும்) இல்லாதவ ராவர்.

அறிவுடையார் பிறிதொன்றும் இல்லாதவராயினும் எல்லாமுடையவராவர்; அறிவில்லாதார் எல்லாமுடையராயினும் ஒன்றும் இல்லாதவ ராவர்.

வெள்ளம் வருமுன் அணைகோலவேண்டும்

28. வரும்முன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(வ - ந.): வரும் முன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வை தூறுபோல கெடும்.

(ப - உ): வரும் முன்னர் - (குற்றம்) வருமுன்னரே; காவாதான் வாழ்க்கை - (அதனை வராமல்) சாவாத அரசனது வாழ்வானது; (அது வந்தால்) எரி முன்னர் வைணீறு போல - நெருப்பின் முன்னர் நின்ற வைக்கோலின் கூட்டம் போல; கெடும் - அழிந்துபோம்.

குற்றம் வருவதற்கு முன்னே அதனைக் காவாத அரசனின் வாழ்க்கை, குற்றம்வரின் நெருப்புக்கு முன் நின்ற வைக்கோற் குவியல் போல அழிந்துவிடும்.

மந்திரியின் பண்பு

29. உற்றநோய் நீக்கி உறுஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(வ - ந.): உற்றநோய் நீக்கி உறாமை முன்காக்கும் பெற்றியார் பேணி கொளல்.

(ப - உ): உற்ற - (தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு) வந்த; நோய் நீக்கி - துன்பங்களை (நீக்கும் விதம் அறிந்து) நீக்கி; உறாமை - (பின்பு அவை) வராதபடி; முன்காக்கும் பெற்றியார் - முன் அறிந்து காக்கவல்ல தன்மையுடையவரை; பேணி கொளல் - (அரசன்) அவர் மகிழத் தக்கவற்றைச் செய்து துணையாகக் கொள்ளக்கடவன்.

தனக்கு வந்த துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கிப் பின் அவ்வகைத் துன்பங்கள் வராதபடி முன்னறிந்து காக்கவல்ல தன்மையுடையாரை அவர் விரும்புவன செய்து அரசன் தன் துணையாகக் கொள்வானாகை.

சேர்க்கையால் அறிவு மாறுபடும்

30. நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு
இனத்துஇயல்பது ஆகும் அறிவு.

(வ - ந): நீர் நிலத்து இயல்பால் திரிந்து அற்று ஆகும்; மாந்தர்க்கு அறிவு இனத்து இயல்பு அது ஆகும்.

(ப - உ): நீர் - நீரானது; நிலத்து இயல்பான் - (தான் சேர்ந்த) நிலத்தினது தன்மையினாலே; திரிந்து அற்று ஆகும் - (தனது) தன்மை மாறுபட்டு அந்நிலத்தினது தன்மையதாகும்; (அதுபோல) மாந்தர்க்கு - மனிதருக்கு; அறிவு - அறிவானது; இனத்து இயல்பு (திரிந்து) அது ஆகும் - (தாம் சேர்ந்த) கூட்டத்தின் குணத்தினாலே (தமது தன்மை மாறுபட்டு) அக்கூட்டத்தினது தன்மையாகும்.

தான் சேர்ந்த நிலத்தின் தன்மையினாலே நீரானது தன் தன்மை மாறுபட்டு அந்நிலத்தின் தன்மை யுடையதாகும்; அதுபோல, மக்களும் தாம் சேர்ந்த இனத்தினது தன்மையினாலே அறிவின் தன்மை மாறுபட்டு அவ்வினத்தின் தன்மையை அடைவர்.

அளவுகடந்தால் அமிழ்தமும் நஞ்சு

**31.** நுனிக்கொம்பர் ஏறினார் அஃதுஇறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி ஆகிவிடும்.

(வ - ந.): கொம்பர் நுனி ஏறினார் அஃது இறந்து ஊக்கின் உயிர்க்கு இறுதியாகிவிடும்.

(ப - உ.): கொம்பர் நுனி ஏறினார் - (ஒருமரக்) கிளையினது நுனியில் ஏறிநின்றவர்; அஃது இறந்து ஊக்கின் - (தமது வலிமையால்) அவ்வளவினைக் கடந்து மேலும் ஏற வலிமை கொள்வராயின்; உயிர்க்கு இறுதியாகிவிடும் - (அவ்வலிமை) அவருயிருக்கு முடிவாகிவிடும்.

ஒரு மரக்கிளையின் நுனியில் ஏறிநின்றவர் அவ்வளவினைக் கடந்து மேலும் ஏற முயல்வாராயின், அம்முயற்சி அவர் உயிருக்கு முடிவாகிவிடும். அதுபோல் தன் வலிக்கு மேலும் முயற்சி செய்வோருக்கு அழிவே வரும்.

அரசர் காலமறிந்து போர் தொடங்கவேண்டும்

**32.** பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(வ - ந.): காக்கை கூகையை பகல் வெல்லும்; இகல் வெல்லும் வேந்தர்க்கு பொழுது வேண்டும்.

(ப - ந.): காக்கை - காகம்; கூகையை பகல் வெல்லும் - (தன்னைப் பார்க்கினும் பலமுள்ள) கோட்டானை பகற்காலத்தில் வெல்லும்; (ஆதலால்) இகல் வெல்லும் வேந்தர்க்கு - பகைவரை வெல்லும் அரசருக்கு; பொழுது வேண்டும் - அதற்கேற்ற காலம் வேண்டும்.

தன்னினும் வலிய கோட்டானைக் காக்கை பகற்பொழுதில் வென்றுவிடும்; ஆதலால் பகைவரை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாதது ஆகும்.

ஒவ்வொருவரும் தந்தம் இடத்தில் வலியர்

**33.** கடல்ஓடா கால்வல் நெடுந்தேர்; கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

(வ - ந.): வல்கால் நெடும்தேர் கடல் ஓடா; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா.

(ப - உ.): வல்கால் நெடும் தேர் - (நிலத்தில் ஓடுகின்ற) வலிய உருளைகளையுடைய பெரிய தேர்கள்; கடல் ஓடா - கடலில் ஓடமாட்டா; கடல் ஓடும் நாவாயும் - கடலில் ஓடுகின்ற மரக்கலங்களும்; நிலத்து ஓடா - நிலத்தில் ஓடமாட்டா.

நிலத்தின்கண் ஓடும் தேர் கடலின்கண் ஓடமாட்டாது; கடலின்கண் ஓடும் மரக்கலம் நிலத்தில் ஓடமாட்டாது.

அதனுல் ஒவ்வொருவரும் தம்தம் இடத்திலிருந்தே அந்த இடத்திற்குத்தக்க கருவிகொண்டு செய்யத்தக்கதைச் செய்தல் நன்று.

காக்கை கரைந்துண்பதுபோல் சுற்றத்தைப் பேணுதல் வேண்டும்

34. காக்கை கரவா கரைந்துஉண்ணும்; ஆக்கமும்
அன்னநீரார்க்கே உள.

(வ - ந): காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள.

(ப - உ): காக்கை - காகங்கள்; கரவா கரைந்து உண்ணும் - (இரையைக் கண்டவிடத்து) மறைக்காமல் (இனத்தை) அழைத்து (அதனேடு) உண்ணும்; ஆக்கமும் - (சுற்றத்தாரால் வருப) செல்வங்களும்; அன்ன நீரார்க்கே உள - அப்படிப்பட்ட குணத்தையுடையவர்களுக்கே உள்ளனவாம்.

காக்கைகள் இரையைக் கண்டவிடத்துத் தம் மினத்தை அழைத்து அதனேடுகூட உண்ணும்; சுற்றத்தவர்களால் அடையும் செல்வங்களும் அவ்வியல்பினை உடைவர்களுக்கே உளவாவன.

இடைவிடாது சிந்தித்துமுயன்ருல் ஆகாத காரியமும் ஆகும்

35. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

(வ - ந.): மற்றும் தான் உள்ளியது உள்ளப் பெறின்; உள்ளியது எய்தல் எளிது மன்.

(ப - உ.): மற்றும் தான் உள்ளியது உள்ளப் பெறின் - பின்னும் அவன் முன்நினைத்த பொருளையே நினைக்கக் கூடுமாயின் ; உள்ளியது எய்தல் எளிது மன் - (அரசன் தான் பெற) நினைத்தபொருளை (அவன் நினைத்த படியே) அடைதல் எளிதாகும். மன், ஒழிபிசை.

ஒரு பொருளை மறதியின்றி ஞாபகத்தில்கொண்டு முயன்றால் அதை அடைதல் எளிது.

அரசன் நீதி ஆட்சியை நோக்கிக் குடிகள் வாழும்

36. வான்நோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

(வ - ந.): உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் ; குடி மன்னவன் கோல் நோக்கி வாழும்.

(ப - உ.): உலகு எல்லாம் - உயிர்கள் எல்லாம்; வான் நோக்கி வாழும் - மழையை நோக்கி வாழாநிற்கும் ; (ஆயினும்) குடி - நாட்டின் மக்கள் ; மன்னவன் கோல் நோக்கி வாழும் - அரசனது செங்கோலை நோக்கி வாழாநிற்கும்.

உலகத்து உயிரெல்லாம் மழை பெய்யுமாயின் நிலை பெறுமெனினும், குடிகள் அரசனின் நீதி ஆட்சி உளதாயின் நிலைபெறும்.

நீரளவே யாகும் நீராம்பல்

37. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

(வ - ந.): மலர் நீட்டம் வெள்ளத்து அனைய ; உயர்வு மாந்தர்தம் உள்ளத்து அனையது.

(ப - உ.): மலர் நீட்டம் - நீர்ப்பூவின் காம்புகளினது நீளம் ; வெள்ளத்து அனைய - (நின்ற) நீரளவினவாம் ; (அதுபோல) உயர்வு - உயர்ச்சியானது ; மாந்தர் தம் உள்ளத்து அனையது-மக்களது மன உறுதியின் அளவினதாம்.

நின்ற நீரினளவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளம்; அதுபோல மக்களின் உயர்ச்சி அவர்கள் ஊக்கத்தினளவினதாகும்.

ஊக்கத்தால் முயற்சியும், முயற்சியால் பெருமையும் உண்டாகும்.

கெடுவார் ஏறும் மரக்கலம்

38. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(வ - ந.): மடிநெடுநீர் மறவி துயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்.

(ப - உ.): மடி - சோம்பலும்; நெடுநீர் -(விரைவிற் செய்யவேண்டியவற்றை) நீடித்துச் செய்யுங் குணமும்; மறவி - மறதியும்; துயில் - நித்திரையும்; நான்கும் - ஆகிய இந்நான்கும்; கெடுநீரார் காமக்கலன் - அழிந்து போகும் இயல்பினையுடையார் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

சோம்பலும், விரைந்து செய்வதனை நீடித்துச் செய்யும் இயல்பும், மறப்பும், நித்திரையும் ஆகிய இந்நான்கும் அழிந்துபோகும் இயல்பினையுடையார் விரும்பி ஏறும் மரக்கலமாகும்.

இந்நான்கும் ஒருவனை அழித்துவிடும்.

நடந்தகால் சிதேவி, இருந்தகால் மூதேவி

39. முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றுஇன்மை
இன்மை புகுத்தி விடும்.

(வ - ந.): முயற்சி திருவினை ஆக்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும்.

(ப - உ): முயற்சி திருவினை ஆக்கும் - ஊக்கம் செல்வத்தை வளர்க்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் - அம்முயற்சி இல்லாமையானது வறுமையை அடைவித்து விடும்.

முயற்சி செல்வத்தை வளர்க்கும்; அஃதில்லாமை வறுமையை அடைவித்து விடும்.

கடல்போல் துன்பமும் அறிவாளன் முன் கெடும்

40. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

(வ - ந.): வெள்ளத்து அனைய இடும்பை அறிவு உடையான் உள்ளத்தின் உள்ள கெடும்.

(ப - உ.): வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம்போலக் கரையில்லாத துன்பமெல்லாம்; அறிவுடையான் உள்ளத்தின் உள்ள - அறிவுடையவன் உள்ளத்தினாலே (ஒன்றை) நினைத்த அளவிலே; கெடும் - கெட்டுப் போகும்.

அறிவுடையான் தன் மனத்தால் ஒரு உபாயத்தை நினைக்க, அவன் முன்வந்த வெள்ளம்போல் கரையில்லாத துன்பங்கள் எல்லாம் கெடும்.

அறிவுடையவன் மிகப் பெரிய துன்பத்தையும் தன் அறிவினால் வெல்வான்.

மந்திரியின் தன்மை

41. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

(வ - ந.): (தொழில் செய்யும்போது) கருவியும், காலமும், செய்கையும், செய்யும் அருவினையும், மாண்டது அமைச்சு.

(ப - உ.): (தொழில் செய்யும்போது) கருவியும் - அதற்கு வேண்டிய கருவிகளும்; காலமும் - (அதற்கேற்ற) காலமும்; செய்கையும் - அதுசெய்யும் விதமும்; செய்யும் அருவினையும் - (அவ்விதத்திலே) செய்யப்படும் அரிய தொழில்களும்; மாண்டது அமைச்சு - பொருந்த எண்ண வல்லவனே மந்திரியாவான்.

தொழில் செய்யும்போது அதற்கு வேண்டும் கருவிகளும், ஏற்றகாலமும், அதுசெய்யும் வகையும், அவ்விடத்தில் செய்யப்படும் அரிய செயலின் தன்மைகளும் ஆகியவற்றை அறியவல்லவனே மந்திரியாவான்.

வறுமை வரினும் பழிப்பன புரியேல்

42. ஈன்ருள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்ருேர் பழிக்கும் வினை.

(வ - ந.): ஈன்ருள் பசி காண்பான் ஆயினும் சான்ருேர் பழிக்கும் வினை செய்யற்க.

(ப - உ.): ஈன்ருள் - (ஒருவன் தன்னைப்) பெற்ற தாயினது; பசி காண்பான் ஆயினும் - பசியை (வறுமையினலே) கண்டு வருந்தும் தன்மையன் ஆயினும்; (அதைக் குறித்து) சான்ருேர் பழிக்கும் - அறிவால் நிறைந்தவர் பழிக்கும்; வினை செய்யற்க - தொழிலைச் செய்யாதிருக்கக் கடவன்.

தன்னைப் பெற்ற தாயின் பசியை வறுமையால் கண்டு வருந்தும் தன்மையனாயினும், அது கருதி அறிவுடையார் பழிக்கும் செயல்களை ஒருவன் செய்யாதொழிக.

எக்காரணத்தானும் அறிவுடையோர் பழிக்கும் செயல்களைச் செய்யலாகாது.

நாட்டிற்கு அழகு ஐந்து

43. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்து.

(வ - ந.): பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் இவ்வைந்தும் நாட்டிற்கு அணி என்ப.

(ப - உ): பிணி இன்மை - நோயின்மையும்; செல்வம் - செல்வமும்; விளைவு - பயிர் விளைவும்; இன்பம் - மகிழ்ச்சியும்; ஏமம் - காவலும்; இவ்வைந்தும் - ஆகிய இவ்வைந்தினையும்; நாட்டிற்கு அணி என்ப - தேசத்திற்கு அழகாகும் என்று (அறிவுடையோர்) கூறுவர்.

நோயின்மை, செல்வம், விளைவு, மகிழ்ச்சி, காவல் என்னும் ஐந்தினையும் பெற்றிருத்தல் நாட்டிற்கு அழகென்று நூல்களை அறிந்தவர் கூறுவர்.

நண்பன் நண்பனுக்கு உதவும் தன்மை

44. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

(வ - ந.): நட்பு, உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவது ஆம்.

(ப - உ.): நட்பு - நட்பு ஆவது; உடுக்கை இழந்தவன் கை போல - ஆடை குலைந்தவனுக்கு கை உதவுதல் போல; (நட்பு கொள்ளப்பட்டவனுக்கு) ஆங்கே - அப்பொழுதே; இடுக்கண் களைவது ஆம் - துன்பத்தை நீக்குவதாம்.

ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவுவதுபோல், நண்பனுக்குத் துன்பம் வந்த இடத்து அப்பொழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பாவது.

நட்புச் செய்யுமுன் ஆராயவேண்டியன

45. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

(வ - ந.): குணனும், குடிமையும், குற்றமும், குன்றா இனனும் அறிந்து நட்பு யாக்க.

(ப - உ.); குணனும் - (ஒருவனது) குணத்தையும்; குடிமையும் - குடிப்பிறப்பையும்; குற்றமும் - குற்றத்தையும்; குன்றா இனனும் - குறைவற்ற சுற்றத்தையும்; அறிந்து நட்பு யாக்க - (ஆராய்ந்து) அறிந்து (அவனோடு) சிநேகம் செய்யக்கடவன்.

ஒருவனது குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் அவன் சுற்றத்தையும் ஆராய்ந்தறிந்து அவனோடு நட்பு செய்க.

நல்ல குணமும், உயர்குடிப் பிறப்பும், நல்லவர் கூட்டமும் உடையவர் நட்பே சிறந்தது.

சொல் ஒன்று, செய்கை ஒன்று உடையவர் நட்பு ஆகாது

46. கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(வ - ந.): வினை வேறு சொல்வேறு பட்டார் தொடர்பு கனவிலும் இன்னாது.

(ப - உ.): வினை வேறு - செய்கை வேறு; சொல் வேறு பட்டார் தொடர்பு - பேச்சு வேறு பட்டவர்களு

டைய நட்பு; கனவிலும் - (நனவில் மாத்திரமல்லாமல்) கனவிலும்; இன்னாது - துன்பஞ் செய்வதாகும்.

மன்னும், ஓவும் அசை.

செயலும் சொல்லும் வேறு வேறு யிருப்பார் நட்பு கனவிலும் துன்பந்தரும்.

குலத்தி னுயர்வை வாயிற் சொல்காட்டும்

47. நிலத்தின் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தின் பிறந்தார்வாய்ச் சொல்.

(வ - ந.): நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்; குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல் காட்டும்.

(ப - உ): நிலத்தில் கிடந்தமை-நிலத்தின் இயல்பை; கால் காட்டும் - (அதனிடத்தே முளைத்த) முளையானது காட்டிவிடும்; (அதுபோல) குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல் - நல்ல குலத்திற் பிறந்தவர்களின் வாயிலுண் டாகுஞ் சொற்கள்; காட்டும் - (அக்குலத்தி னியல்பை) காட்டும்.

நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும்; அதுபோல் குலத்தி னியல்பை அதன்கட் பிறந்தார் வாயிற் சொல்காட்டும்.

பிறரைப் பழித்தல், கடுஞ்சொல், பொய், பயனில் சொல் முதலியவற்றைச் சொல்லாதவரே உயர்ந்தவர்.

நிலைதப்பினோர் தலையிலிருந்து விழுந்த மயிர் போல்வர்

48. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

(வ - ந): மாந்தர் நிலையின் இழிந்தக் கடைதலைபின் இழிந்த மயிர் அனையர்.

(ப - உ.): மாந்தர் - (நற்குடிப்பிறந்த) மனிதர்; நிலையின் - (தம உயர்ந்த) நிலையிலிருந்து; இழிந்தக்கடை - தாழ்ந்த இடத்து; தலையின் இழிந்த மயிர் அனையர் - தலையிலிருந்து வீழ்ந்த மயிர் போல்வர்.

நற்குடிப் பிறந்தோர் தம் உயர்ந்த நிலையைவிட்டுத் தவறித் தாழ்ந்தவிடத்து, தலையைவிட்டு வீழ்ந்த மயிரைப் போல் அருவருக்கத்தக்கவ ராவர்.

செய்தொழில் வேறுபாட்டால் பெருமை சிறுமை உண்டு

49. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(வ - ந.): எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்; சிறப்பு செய்தொழில் வேற்றுமையால் ஒவ்வா.

(ப - உ.): எல்லா உயிர்க்கும் - எல்லா மக்களுயிர்க்கும்; பிறப்பு ஒக்கும் - (பொதுவாகிய) பிறப்பியல்பு ஒத்திருக்கும்: (ஆயினும்) சிறப்பு - (பெருமை சிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள் ; செய்தொழில் வேற்றுமையால் ஒவ்வா - செய்யுந் தொழில்களது வேறுபாட்டால் ஒத்திரா.

மக்கள் பிறப்பால் ஒத்தவர்களாயினும் பெருமை சிறுமை என்னும் அவர்களது சிறப்பியல்புகள் அவர்கள் செய்யும் தொழில்களின் வேறுபாட்டால் உண்டாகும்.

உயர்குடியிற் பிறந்தும் இழிவானவற்றைச் செய்வோர் தாழ்ந்தோரே. தாழ்குடியிற் பிறந்தும் நல்லவற்றைச் செய்வோர் உயர்ந்தோரே.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை

50. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றுஎல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்.

(வ - ந): உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர்.

(ப - உ.): உழுது - (எல்லோரும் உண்ணும்படி) உழுதலைச் செய்து; உண்டு வாழ்வாரே - (அதனால் தாமும்) உண்டு வாழ்கின்றவர்களே; வாழ்வார் - (பிறர்க்குச் சேவகம் புரியாது) வாழ்கின்றவர்; மற்று எல்லாம் - மற்றவரெல்லாரும்; தொழுது - (பிறரைத்) தொழுது; உண்டு - (அதனால் தாமும்) உண்டு; பின் செல்பவர் - (அவரைப்) பின் செல்லுகின்றவராவர்.

எல்லோருக்கும் உணவு கிடைக்க உழுது அதனால் தாமும் உண்டு வாழ்கின்றவரே பிறர்க்குச் சேவகம் புரியாது வாழ்கின்றவராவர்; மற்றவரெல்லாம் பிறரைத் தொழுது அதனால் உண்டு அவரைப் பின் செல்கின்றவராவர்.

உழவரல்லாத மற்றையோர் பிறருக்கு அடங்கியே வாழவேண்டும்.

## அருஞ் சொல் அகர வரிசை

அகம் - மனம்
அகழ்தல் - தோண்டுதல்
அமர்ந்து - விருப்பி
அமரர் - தேவர்
அமைச்சு - மந்திரி
அழுக்காறு - பொறாமை
அவாம் - விரும்பும
ஆக்கம் - செல்வம்
ஆதிபகவன் - கடவுள்
ஆர் - (பொறுத்தற்கு) அரிய
ஆறு - நெறி, வழி
ஆற்றும் - செய்யும்
இகல் - பகை, மாறுபாடு
இடுக்கண் - துயர்
இடும்பை - துன்பம்
இருள் - நரகம்
இழிதல்-உதிர்தல், தாழ்தல்
இனம் - கூட்டம்
ஈதல் - கொடுத்தல்
உதவி - கைம்மாறு
உடுக்கை - உடை
உய்த்து - செலுத்தி
உள்ளம் - மனம்
உறுமை - நிகழாமை
ஊக்குதல் - முயலுதல்
ஊங்கு - மேற்பட்ட
ஊருணி - ஊரார் நீருண்ணும் குளம்
என்பு - எலும்பு
ஏதிலார் - அயலார்
ஓம்பி - காப்பாற்றி
கசடு - குற்றம்
கரவா - மறையாது
கரைதல் - அழைத்தல்
கலன் - மரக்கலம்
களைவது - நீக்குவது
காமம் - விருப்பம்
கால் - சக்கரம், மூளை
குடி - ஆளப்படும் மக்கள்
குடிமை - குடிப்பிறப்பு
கூகை - கோட்டான், பேராந்தை
கொல்-வியப்பிடைச் சொல்
கோடுதல் - சாய்தல்
கோல் - செங்கோல்
கோள் - கொள்கை
சமன் செய்து சீர் தூக்கும் கோல் - தராசு
சான்றோர் - அறிவால் நிறைந்தோர்
சினம் - கோபம்
தக - ஏற்றவாறு

...HARA PUBLIC LIBRA...

# திருக்குறள் - அறுபது

பதவுரை கருத்துரைகளுடன்

இரண்டாம் பாகம்

(2-ஆம் பாரம் அல்லது 7-வது வகுப்புக் குரியது)

[1948-ல் வெளிவந்த அரசினர் பாடத் திட்டத்திற் கமைய வெளியிடப்பட்டுள்ளது.]

... PUBLIC LIBRARY
28 JAN 1956
MADRAS

[*Approved for Class Use: Vide Page 121, Part II, Consolidated List dated 19th May 1954.*]

பதிப்பாளர்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

**53-56,** பவழக்காரத் தெரு : : சென்னை 1

பதிப்புரிமை] 1954 [விலை அணா $3\frac{1}{2}$

# திருவள்ளுவர்

வள்ளுவன் என்பது பழங்காலத்து அரசனது கருமத் தலைவருள் ஒருவனுக்கு வழங்கிய உத்தியோகப் பெயர். இவனுடைய தொழில், யானையின் பிடர்மீது இருந்து அரச கட்டளையை மக்களுக்கு விளம்பரப்படுத்துதல். திருக்குறளைச் செய்த ஆசிரியர் தமிழ் அரசன் ஒருவனிடம் வள்ளுவ உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய இயற்பெயர் மறக்கப்பட்டது. ஆகவே, அவர் வள்ளுவர் என்னும் உத்தியோகப் பெயரால் அறியப் பட்டார். வள்ளுவர் என்பது கணக்கன் என்பது போன்ற வழக்கு. பிற்காலத்தில் வள்ளுவன் என்னும் பெயர் பறைக்குலத்தவரைக் குறிக்க வழங்கிற்று. ஆகவே, அவரைப் பறைக்குலத்தவரென்று பிற்காலத்தவர் தப்பாகக் கருதலாயினர். வள்ளுவர் செய்த நூலுக்கு இடப்பட்ட பெயர் யாது என அறியப்படவில்லை. அந்நூல் குறள் வெண்பாவினால் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அது குறள் என வழங்கப்பட்டு வருகின்றது. திரு என்பது உயர்வு கருதி இட்டு வழங்கப்படும் சிறப்புச் சொல். திருக்குறளைக் கொண்டு அவர் சமயத்தை அறியமுடியவில்லை. வினை, உயிர், பிறப்பு, கடவுள், தீவினை, அறம் போன்ற தத்துவக் கருத்துக்களைப்பற்றிப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் வரும் தனித் தமிழ்ச் சொற்களைக் கொண்டு நன்கு அறியலாம். இக் கருத்துக்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. பழந்தமிழர் சமயமும் இவ்வகையினதே. திருவள்ளுவர் சைவ மதத்தினர் எனக்கொண்டு அவருடைய வடிவை உருத்திராக்க வடங்கள் அணிந்தவராகவும் திருநீற்றுப் பூச்சுடையவராகவும் அமைத்துக் காட்டுவர் சிலர். சங்ககாலத்தில் உருத்திராக்க வடம் பூணும் வழக்கு காணப்படவில்லை.

திருவள்ளுவர் இற்றைக்கு 1,800 ஆண்டுகளின் முன் வாழ்ந்தார். அவரது பிறப்பிடம் மதுரை எனத் திருவள்ளுவ மாலைச் செய்யுளொன்றால் அறியப்படுகின்றது. திருவள்ளுவரைப் பற்றிய ஏனைய வரலாறுகளையும், அவற்றின் ஆராய்ச்சி முடிவுகளையும் திருவள்ளுவர் என்னும் எமது விரிந்த நூலிற் காண்க.

ந. சி. க.

52571

29 JAN 1958

# திருக்குறள்—அறுபது

## இரண்டாம் பாகம்

கடவுளை நினைப்பவர்க்கு மனக்கவலை நீங்கும்

1. தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

(வ-ந): *தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.*

(ப-உ): *தனக்கு உவமை இல்லாதான் - தனக்கு நிகர் இல்லாத கடவுளுடைய; தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - பாதங்களை அடையாதவர்களுக்கு; மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தில் உண்டாகும் துன்பங்களைப் போக்குதல் முடியாது; தாள் சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.*

*கடவுளை இடைவிடாது நினையாதவர்களுக்கு மனத்தி லுண்டாகும் துன்பம் நீங்குதல் முடியாததாகும்.*

இல்லறத்தால் வருவதே இன்பம்

2. அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
புறத்த; புகழும் இல.

(வ - ந): *அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம் புறத்த; புகழும் இல.*

(வ - ந): *அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வாழ்வதால் வரும் இன்பமே இன்பமாகும்; மற்று எல்லாம் - அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் (இன்பமாயினும்); புறத்த - துன்பத்துட் சேர்வனவாம்; (அதுவுமல்லாமல்) புகழும் இல - புகழையும் உடையன அல்ல.*

இல்லற வாழ்வினால் வருவதே இன்பம்; மற்றவகையில் வருவன எல்லாம் இன்பமாயினும் துன்பங்களாகும்; அதுவேயுமன்றிப் புகழும் உடையன அல்ல.

மகன் அறிவுடையன் எனக்கேட்ட தாயின் மகிழ்ச்சி

3. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

(வ - உ): தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் ஈன்றபொழுதின் பெரிது உவக்கும்.

(ப - உ): தன் மகனை - தனது புதல்வனை; சான்றோன் என - (கல்வி கேள்விகளினால்) நிறைந்தோனென்று (அறிவுடையோர்) சொல்ல; கேட்ட தாய் - அதனைக் கேட்ட தாயானவள்; ஈன்ற பொழுதின் - அவனைப் பெற்ற காலத்தைக்காட்டிலும்; பெரிது உவக்கும் - மிக மகிழ்வாள்.

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையார் சொல்லக் கேட்டதாய், தான் அவனைப் பெற்ற பொழுதில் ஏற்பட்ட மகிழ்ச்சியினும் மிக மகிழ்வாள்.

உயிருக்கு உயிராவது அன்பே

4. அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

(வ - ந.): அன்பின் வழியது உயிர் நிலை; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த.

(ப - உ); அன்பின் வழியது - அன்பு முதலாக அதன் வழி நின்ற உடம்பே; உயிர் நிலை - உயிர்நின்ற உடம்பாகும்; அஃது இலார்க்கு - அவ்வன்பு இல்லாதவர்களுக்கு; உடம்பு - உடம்புகளானவை; என்பு தோல் போர்த்த - எலும்பைத் தோலினால் போர்க்கப் பட்டனவாம் (உயிர் நின்ற உடம்பாகா).

அன்பை இருப்பிடமாயுள்ள உடம்பே உயிருடன் கூடிய உடம்பாகும்; அன்பில்லாதவருடைய உடம்புகள் எலும்பைத் தோலாற் போர்த்த உடம்பாகும்; உயிருடையன ஆகா.

அன்பை அடைத்து வைக்க முடியாது; கண்ணீர் காட்டிவிடும்

5. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

(வ - ந.) : ஆர்வலர் புன்கண் நீர் பூசல் தரும்; (ஆதலால்) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ?

(ப - உ) : ஆர்வலர் - அன்புடையாரது; புல் கண் நீர் - துன்பத்தைக் காண்பிக்கும் கண்ணீரே; பூசல் தரும் - (அன்பை யாவரும் அறிய) வெளிப்படுத்தும்; (ஆதலால்) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் (பிறர் அறியாமல்) அதை அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் உளதோ?

தம்மால் அன்பு காட்டப்பட்டவரது துன்பத்தைக் கண்டபோது அன்புடையார் கண்களினின்று சிந்துகின்ற கண்ணீரே உள்நின்ற அன்பை எல்லாரும் அறிய வெளிப்படுத்துமாதலால், அன்பிற்கும் அதைப் பிறர் அறியாமல் அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் உண்டோ?

விருந்திடுவோம் வீட்டில் திருமகள் உறைவாள்

6. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

(வ - ந.) : முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல், செய்யாள் அகன் அமர்ந்து உரையும்.

(ப - உ) : முகன் அமர்ந்து - முகம் மலர்ந்து; நல் விருந்து ஓம்புவான் இல் - தகுந்த விருந்தினரைக் காப்பவனது வீட்டில்; செய்யாள் - இலக்குமி; அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து; உறையும் - வாழ்ந்து கொண்டிருப்பாள்.

முகம் மலர்ந்து விருந்தினரை உபசரிப்பவனது வீட்டில் இலக்குமி மனமகிழ்ந்து வாழ்வாள்.

வணக்கமும் இனிய சொல்லுமே சிறந்த அணிகலம்

7. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி ; அல்ல மற்றுப் பிற.

(வ - ந): ஒருவற்கு அணி பணிவுடையன் இன் சொலன் ஆதல்; மற்று பிற அல்ல.

(ப - உ): ஒருவற்கு - ஒருவனுக்கு; அணி - ஆபரணமாவது; பணிவு உடையன் - (பெரியோரிடத்தே) வணக்கமுடையவனாகி; இன் சொலன் ஆதல் - (எல்லாரிடத்தும்) இனிய சொல்லை உடையவனாயிருக்கையாம்; பிற - (இவ்விரண்டுமல்லாமல் உடம்பில் அணியும்) மற்றை ஆபரணங்கள்; அல்ல - ஆபரணங்களாகா.

மற்று - அசைநிலை.

ஒருவனுக்கு ஆபரணமாவது பெரியோரிடத்து வணக்கமும் எல்லாரிடத்தும் இனிய சொல்லும் உடையனாதல்; இவையல்லாது உடம்பில் அணியும் வேறு ஆபரணங்கள் அணிகளாகமாட்டா.

ஆபத்துக் காலத்தில் கிடைத்த உதவி உலகினும் பெரிது

8. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(வ - ந.): காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் ஞாலத்தில் மாணப் பெரிது.

(ப - உ): காலத்தினால் - (ஒருவனுக்கு) ஆபத்து வந்த காலத்தில்; செய்த - (ஒருவன்) செய்த; நன்றி - உபகாரம்; சிறிது எனினும் - சிறிதாயிருந்ததாயினும்; (அது கிடைத்த சமயத்தை நோக்க) ஞாலத்தின் - நில உலகத்தினும்; மாணப் பெரிது - மிகப் பெரிதாம்.

ஒருவனுக்கு ஆபத்து வந்த காலத்தில் ஒருவன் செய்த உபகாரம் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க அது இப்பூமியினும் மிகப் பெரியதாகும்.

### பிறர் பொருளைத் தன் பொருள்போல் பேணுக

9. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்

(வ - ந.): பிறவும் தமபோல் பேணி செயின் வாணிகம் செய்வார்க்கு வாணிகம்.

(ப - உ): பிறவும்-பிறர்பொருளையும்; தமபோல் - தமது பொருளைப்போல்; பேணி செயின் - பாதுகாத்து வாணிகம்செய்தால்; வாணிகம்செய்வார்க்கு - வாணிகம் செய்கின்றவர்களுக்கு; வாணிகம் - வியாபாரம் பெருகும்.

பிறர் பொருளையும் தம்பொருள் போல் பாதுகாத்து வாணிகம் செய்கின்றவர்களுக்கு வாணிகம் வளரும்.

### வணக்கம் செல்வார்க்குப் பிறிதொரு செல்வம் போன்றது

10. எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருள்ளும்
செல்வார்க்கே செல்வம் தகைத்து.

(வ - ந.): பணிதல் எல்லார்க்கும் நன்றாகும்; அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து.

(ப - உ): பணிதல் - (பெருமைப்பாடில்லாது) அடங்குதல்; எல்லார்க்கும் - யாவருக்கும்; நன்று ஆம் - (பொதுப்பட) நல்லதாகும்; (ஆயினும) அவருள்ளும் - அவ்வெல்லாருள்ளும்; செல்வர்க்கே செல்வம் தகைத்து - செல்வர்களுக்கே வேறு ஒரு செல்வமாய்த் தோன்றும் சிறப்பினை உடையதாம்.

செருக்கின்றி அடங்குதல் எல்லார்க்கும நன்றெனினும், அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையார்க்கே அது வேறு ஒரு செல்வமுமாகும் சிறப்பினை உடையது.

### ஒழுக்கத்தினல் குலம் அறியப்படும்

11. ஒழுக்க முடமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

(வ - ந): ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்.

(ப - உ): ஒழுக்கம் உடைமை-நல்ல ஒழுக்கமுடைமையானது; குடிமை - உயர்ந்த குலத்தைக்காட்டும்; இழுக்கம் - நல்லொழுக்கத்தினின்றும் தவறுதல்; இழிந்த பிறப்பாய் விடும் - இழிந்த குலமாகிவிடும்.

ஒருவன் இழிந்த குலத்தவனாயினும் ஒழுக்கமுடையவனாயின் உயர் குலத்தவனாம்; அதனைத் தப்பி ஒழுகுவனாயின் உயர்குலத்தவனாயினும் இழிகுலத்தவனாய் விடுவான்.

ஒழுக்கம் மேன்மை தரும்

12. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

(வ - ந.): ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்; இழுக்கத்தின் எய்தா பழி எய்துவர்.

(ப - உ): ஒழுக்கத்தின் - ஒழுக்கத்தினால்; மேன்மை எய்துவர் - (எல்லாரும்) மேம்பாட்டை அடைவர்; இழுக்கத்தின் - (அதனின்று) தவறுதலினாலே; எய்தா பழி எய்துவர் - தாம் அடைதற்கு உரியதல்லாத பழியையும் அடைவர்.

ஒழுக்கத்தினால் மேன்மை உண்டாகும்; ஒழுக்கந் தவறினால் அவன் செய்யாத பழியும் அவனை வந்தடையும். [ஒழுக்கந்தவறினவர்மேல் பகையினால் ஒருவன் இல்லாத பழியைச் சொல்வானாயினும் அதனையும் அவன் செய்திருப்பானென்று உலகம் ஏற்கும்.]

பொறுத்தார்க்கு என்றும் புகழ்

13. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

(வ - ந.): ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்கு பொன்றும் துணையும் புகழ்.

(ப - உ): ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்கு செய்தவனைத்) தண்டித்தவர்க்கு (உண்டாவது); ஒருநாளை இன்பம் - அவ்வொருநாளை இன்பமே; பொறுத்தார்க்கு - (அதனைப்) பொறுத்தவர்க்கு; பொன்றும் துணையும் புகழ் - (உலகம்) அழியுமளவும் புகழ் உண்டாம்.

தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர்க்கு உண்டாவது அவ்வொருநாளை இன்பமே; அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழ் உண்டாம்.

பொறாமை செல்வத்தைக் கெடுக்கும்

**14.** அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீஉழி உய்த்து விடும்.

(வ - ந): அழுக்காறு என ஒருபாவி திரு செற்று தீ உழி உய்த்துவிடும்.

(ப - உ): அழுக்காறு என ஒரு பாவி - பொறாமை என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன்; திரு செற்று - (தன்னை உடையவனை இம்மையில் அவனது) செல்வத்தைக் கெடுத்து; தீ உழி உய்த்துவிடும் - (மறுமையில்) நரகத்தில் செலுத்திவிடுவான்.

பொறாமை என்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி தன்னை உடையவனை இம்மையில் செல்வத்தைக் கெடுத்து, மறுமையில் நரகத்தில் செலுத்திவிடுவான்.

பிறன்பொருளை விரும்பாதவனிடத்துத் திருமகள் சேர்வள்

**15.** அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு.

(வ - ந): அறன் அறிந்து வெஃகா அறிவுடையார், திரு திறன் அறிந்து ஆங்கே சேரும்.

(ப - உ): அறன் அறிந்து - (இது) தருமமென அறிந்து; வெஃகா - (பிறர் பொருளை) விரும்பாத; அறிவுடையார் - அறிவுடையாரை; திரு - இலக்குமி; திறன் அறிந்து - (தான் சேர்தற்கு ஏற்ற) தகுதியை அறிந்து; ஆங்கே சேரும் - அப்பொழுதே சேர்வாள்.

இது அறமென அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தானே தகுதி அறிந்து அப்பொழுதே சேர்வாள்.

புறங் கூறுதலால் உறவினரும் பிரிவர்

16. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர், நகச்சொல்லி
நட்பாடல் தேற்று தவர்.

(வ - ந): நகச்சொல்லி நட்பு ஆடல் தேற்றுதவர் பகச்சொல்லி கேளிர் பிரிப்பர்.

(ப - உ): நகச்சொல்லி - (கூடி) மகிழுமாறு (இனிய சொற்களைச்) சொல்லி; நட்பு ஆடல் - (அயலாரோடு) சிநேகம் செய்தலை; தேற்றுதவர் - (தமக்கு நன்மை என்று) அறியாதவர்; பகச்சொல்லி - (தம்மைவிட்டு) நீங்குமாறு புறங்கூறி; கேளிர் பிரிப்பர் - (தமது) சுற்றத்தாரையும் பிரியப்பண்ணுவர்.

கூடி மகிழுமாறு இனிய சொற்களைச்சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதவர், தம்மைவிட்டு நீங்குமாறு புறங்கூறி, தமது உறவினரையும் பிரியப் பண்ணுவர்.

வறுமையினால் தீமை செய்யின் மேலும் வறுமை வரும்

17. இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகு மற்றும் பெயர்த்து.

(வ - ந): இலன் என்று தீயவை செய்யற்க; செய்யின் பெயர்த்து இலன் ஆகும்.

(ப - உ): இலன் என்று - (யான்) வறுமையுடையேனென்று நினைத்து; தீயவை - (அதைத் தீர்த்துக்கொள்வதற்கு) தீவினைகளை; செய்யற்க - (ஒருவன் பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன்; செய்யின் - செய்வானாயின்; பெயர்த்து - பின்னும்; இலன் ஆகும் - வறுமையுடையவனாவான்.

யான் வறியனென்று கருதி அதைத் தீர்த்துக்கொள்வதற்குப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக; செய்வானாயின் இன்னும் வறியவனாவான்.

உபகாரம் செய்வான் செல்வம் உள்ளூர்ப் பழமரத்துக்கு நேர்

18. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருல் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

(வ - ந): செல்வம் - நயன் உடையான்கண் படின், ஊர் உள் மரம் பயன் பழுத்தற்று.

(ப - உ): செல்வம் - செல்வமானது; நயனுடையான்கண் படின் - உபகாரம் செய்பவனிடத்தே உண்டாகுமானல் (அவ்வுண்டாதல்); ஊர் உள் மரம் - ஊர் நடுவே உள்ள மரத்தினிடத்தே; பயன் - பழம்; பழுத்த அற்று - பழுத்தாற் போலும்.

உபகாரம் செய்வானிடத்தே செல்வம் உண்டாகுமாயின், அஃது ஊர் நடுவே நிற்கும் மரம் காய்த்துப் பழுத்தது போலாகும்.

கொடுத்து மகிழ்வதே இன்பம்

19. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(வ - ந): தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கண் அவர், ஈத்து உவக்கும் இன்பம் அறியார் கொல்.

(ப - உ): தாம் உடைமை - தாம் தமது பொருளை; வைத்து இழக்கும் வன்கண் அவர் - கொடாமல் வைத்துப் பின் அதனை இழந்து போகின்ற கொடியவர்; ஈத்து - (வறியவர்களுக்குக்) கொடுத்து; உவக்கும் - அவர்கள் மகிழ்வதால் உண்டாகின்ற; இன்பம் - இன்பத்தை; அறியார் கொல் - அறியமாட்டார்களோ? (அறியார்) கொல் - வியப்பு இடைச்சொல்.

தமது செல்வத்தைச் சேர்த்துவைத்துப் பின் அதனை இழந்துபோகின்ற கொடியவர், கொடுத்தலாலுண்டாகும் மகிழ்ச்சியை அறியார்போலும்!

கொடையும் புகழுமே உயிர்க்குப் பயன்

**20.** ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

(வ - ந.): ஈதல், இசைபட வாழ்தல், அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை.

(ப - உ.): ஈதல் - (வறியார்க்குக்) கொடுத்தல்; இசைபட வாழ்தல் - (அதனால்) புகழுண்டாகும்படி வாழ்தல்; அது அல்லது - அப்புகழ் அல்லது; உயிர்க்கு ஊதியம் இல்லை - (மக்கள்) உயிர்க்குப் பயன் (பிறிதொன்றும்) இல்லை.

மக்களுயிர்க்குக் கொடையினாலுண்டாகும் புகழை விட வேறொரு பயனுமில்லை. ஆதலால், வறியார்க்குக் கொடுங்கள்; புகழ் உண்டாகுமாறு வாழுங்கள்.

குற்றமென அறிந்தவற்றைச் செய்யின் வேடத்தாற் பயனில்லை

**21.** வான்உயர் தோற்றம் எவன் செய்யும் தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

(வ - ந.): தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின், வான் உயர் தோற்றம் எவன் செய்யும்.

(ப - உ.): தான் அறி குற்றம் - தான் அறிந்த குற்றத்திலே; தன் நெஞ்சம் படின் - தனது மனம் தாழுமாயின் (ஒருவனுக்கு) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - வான்போல் உயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்?

தான் குற்றமென்று அறிந்ததை ஒருவன் மனமாரச் செய்வானானால் அவனுக்கு வானம்போல் உயர்ந்த தவ வேடத்தினால் ஒரு பயனுமில்லை.

குற்றங்களை நினைத்தலும் பாவம்

**22.** உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கொள்வேம் எனல்.

(வ - ந.): உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன் பொருளை கள்ளத்தால் கொள்வேம் எனல்.

(ப - உ.): உள்ளத்தால் - (குற்றங்களைத் தமது) மனதினால், உள்ளலும் தீதே - நினைத்தலும் பாவமாகும்; (ஆதலால்) பிறன் பொருளை கள்ளத்தால் கொள்வேம் எனல் - பிறனது பொருளை அவனறியாதவாறு வஞ்சித்துக் கொள்வோம் என்று நினையாதிருக்கக் கடவர்.

குற்றங்களை நெஞ்சால் நினைத்தலும் பாவம். ஆதலால் பிறனொருவன் பொருளை அவன் அறியாதபடி வஞ்சித்துக் கொள்வோம் என்றுகூட நினையாதே.

பொய்யாமையே சிறந்த விளக்கு

23. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(வ - ந.): சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல; பொய்யா விளக்கே விளக்கு.

(ப - உ.): சான்றோர்க்கு - (குணங்களால்) நிறைந்தவர்களுக்கு; எல்லா விளக்கும் - (வெளியிருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம்; விளக்கு அல்ல - விளக்குகளாவன அல்ல; பொய்யா விளக்கே விளக்கு - (மன இருளை நீக்குகின்ற) பொய்யாமையாகிய விளக்கே விளக்காம்.

புற இருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகா; குணத்தால் நிறைந்தவர்க்கு மன இருள் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்கு.

ஆறுவது சினம்

24. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

(வ - ந.): யார் மாட்டும் வெகுளியை மறத்தல்; தீய பிறத்தல் அதனான் வரும்.

(ப - உ): யார் மாட்டும் - யாவரிடத்திலும்; வெகுளியை மறத்தல் - கோபத்தை மறக்கக் கடவர்; (ஒருவ

ருக்கு) தீய பிறத்தல் அதனால் வரும் - தீமையுடையன எல்லாம் உண்டாகுதல் அக்கோபத்தினாலே வரும்.

ஒருவர்க்குத் தீயன எல்லாம் கோபத்தால் வருதலால் யாவரிடத்தும் கோபத்தைக் காட்டாது ஒழிக.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

25. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

(வ - ந.): பிறர்க்கு இன்னா முன்பகல் செய்யின் தமக்கு இன்னா பின்பகல் தாமே வரும்.

(ப - உ.): பிறர்க்கு - மற்றவர்களுக்கு; இன்னா - துன்பந்தருபவற்றை; முன்பகல் செய்யின் - முன்பொழுதிலே செய்தால்; தமக்கு - தங்கட்கு; இன்னா - துன்பந்தருபவை; பின்பகல் தாமே வரும் - பின்பொழுதில் (பிறர் செய்யாமல்) தாமே வரும்.

ஒருவர் பிறர்க்குத் துன்பந் தருபவற்றை முன்பொழுதில் செய்தால் அவர்க்குத் துன்பம் பிற்பகலில் பிறர் செய்யாமல் தானே வரும்.

அரசர் குணங்கள் நான்கு

26. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

(வ - ந.): வேந்தற்கு இயல்பு அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை.

(ப - உ.): வேந்தற்கு இயல்பு - அரசனுக்கு இயல்பு; அஞ்சாமை - மன உறுதி; ஈகை - கொடை; அறிவு-அறிவு; ஊக்கம் - மன எழுச்சி; இந்நான்கும் - ஆகிய இந் நான்கு குணங்களும்; எஞ்சாமை - இடைவிடாது நிற்றல்.

அரசனுக்கு இயல்பாவது மன உறுதி, கொடை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கும் இடைவிடாது நிற்றலாம்.

கல்வியே கண்

27. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(வ - ந): கற்றோர் கண்ணுடையர் என்பவர்; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர்.

(ப - உ): கற்றோர் கண்ணுடையர் என்பவர் - கற்றவர் கண்களை உடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுவர்; கல்லாதவர் - படியாதவர்; முகத்து இரண்டு புண் உடையவர்-முகத்தினிடத்து இரண்டு புண்களை உடையவராவர்.

கண்ணுடையவர்கள் என்று உயர்வாகக் கூறப்படுவார் கற்றவரே; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் ஆவர்.

கல்வியின் அளவே அறிவு

28. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

(வ - ந.): மணல் கேணி தொட்ட அனைத்து ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்ற அனைத்து ஊறும்.

(ப - உ): மணல் கேணி - மணலிடத்துள்ள ஊற்று; தொட்ட அனைத்து ஊறும் - தோண்டிய அளவினதாக நீர் ஊறும்; (அதுபோல) மாந்தர்க்கு அறிவு கற்ற அனைத்து ஊறும் - மனிதருக்கு அறிவு கற்ற அளவினதாகச் சுரக்கும்.

மணலிடத்துள்ள கேணி தோண்டிய அளவுக்கு ஊறும்; அதுபோல மனிதருக்கு அறிவு கற்ற அளவினதாக ஊறும்.

கல்வியில்லாதவன் பேச்சு, கோடுகளின்றிக் காய்களை
உருட்டி ஆடினது போலாகும்

29. அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(வ - ந): நிரம்பிய நூல் இன்றி கோட்டி கொளல் அரங்கு இன்றி வட்டு ஆடிய அற்று.

(ப - உ): நிரம்பிய - (தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய; நூல் இன்றி - நூல்கள் (அறிவை) இல்லாமல்; கோட்டி கொளல் - (ஒருவன்) சபையில் ஒன்றைச்சொல்லுதல்; அரங்கு இன்றி - வகுக்கும் இடமின்றி (கோடுகள் இன்றி); வட்டு ஆடிய அற்று - காய்களை உருட்டியது போல் ஆகும்.

அறிவு நிரம்புதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் சபையின் கண் பேசுதல், கோடுகளை வரையாமல் காய்களை உருட்டி ஆடினாற்போல் பயனற்றதாகும்.

கேள்வி அளவிற்கே பெருமை உண்டாகும்

30. எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

(வ - ந.): நல்லவை எனைத்து ஆனும் கேட்க; அனைத்து ஆனும் ஆன்ற பெருமை தரும்.

(ப - உ.): நல்லவை - (ஒருவன்) பயன் தரும் பொருள்களுள்; எனைத்து ஆனும் - எவ்வளவு சிறியதாயினும்; கேட்க-கேட்கக் கடவன்; (அக்கேள்வியானது) அனைத்து ஆனும் - அவ்வளவினாலும்; ஆன்ற பெருமை தரும் - நிறைந்த பெருமையைத் தரும்.

கேள்வி சிறிதாயினும் நிறைந்த பெருமையைத் தருமாதலால் ஒருவன், சிறிதாயினும் பயன் தரும் உரைகளைக் கேட்கக்கடவன்.

பின் வருவதை அறிவார் அறிவுடையார்

31. அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃது அறி கல்லா தவர்.

(வ - ந): ஆவது அறிவார் அறிவுடையார்; அஃது அறிகல்லாதவர் அறிவிலார்.

(ப - உ.): ஆவது - வரக்கடவதை; அறிவார் - (முன்னே) அறியவல்லவர்; அறிவுடையார் - அறிவை உடையவராவர்; அஃது - அவ்வரக்கடவதை; அறிகல்

லாதவர் - (முன்னே) அறியமாட்டாதவர்; அறிவிலார் - அறிவில்லாதவராவர்.

அறிவுடையவர், பின் வரக்கூடியதை முன் அறிய வல்லார்; அதனை முன் அறிய மாட்டாதவர் அறிவில்லாதவராவர்.

அரசன் தன்குற்றத்தையும் பிறர்குற்றத்தையும் போக்கவேண்டும்

32. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு?

(வ - ந.): தன்குற்றம் நீக்கி பிறர்குற்றம் காண் கின் பின் இறைக்கு ஆகும் குற்றம் என்.?

(ப - உ.): தன்குற்றம் - தனது குற்றத்தை; நீக்கி- (முன்கண்டு) போக்கி; பிறர்குற்றம் - (பின்பு) பிறர்குற்றத்தை; காண்கிற்பின் - ஆராயவல்லவனாயின்; இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு நேரக்கூடிய குற்றம் யாது? ஒன்றுமில்லை.

முன்னர் தன்குற்றத்தைப் போக்கி, பின்னர் பிறர் குற்றங்காணவல்ல அரசனுக்கு வரக்கூடிய குற்றம் யாது?

[தன் குற்றத்தையே அன்றிப் பிறர் குற்றத்தையும் அரசன் நீக்கவேண்டும்.]

அறிவுடையோரைத் துணைக்கொள்ளுதல் வலிமை

33. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

(வ - ந.): தம்மில் பெரியார் தமர் ஆக ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை.

(ப - உ.): தம்மில் பெரியார் - (அறிவு முதலியவற்றால்) தம்மினுயர்ந்தோரை; தமர் ஆக - தமக்குச் சிறந்த துணைவராகக் கருதி; ஒழுகுதல் - (தாம் அவர் சொற்படி நடத்தல்; வன்மையுள் எல்லாம் - எல்லா வலிமைகளினும்; தலை - சிறந்த வலிமையாம்.

அறிவு முதலியவற்றால் தம்மில் மேம்பட்டாரைத் தமக்குச் சிறந்த துணைவராகக் கருதித் தாம் அவர் புத்தி கேட்டு நடத்தல் எல்லா வலிமைகளினும் சிறந்தது.

நண்பரால் ஒருவன் குணம் அறியப்படும்

34\. மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

(வ - ந.): மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம்.

(ப - உ.): மாந்தர்க்கு - மனிதர்க்கு; உணர்ச்சி - பொது அறிவானது; மனத்தான் - (தம்) மனம் காரணமாக; ஆம் - உண்டாகும்; இன்னான் எனப்படும் சொல் - (இவன்) இன்ன தன்மையன் என்று (உலகத்தாராலே) சொல்லப்படும் சொல்லானது; இனத்தான் ஆம் - இனம் காரணமாக உண்டாகும்.

மனிதருக்குப் பொதுவான அறிவு அவர் மனம் காரணமாக உண்டாகும்; இவன் இத்தன்மையனென்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இவனைச் சேர்ந்தவரின் காரணமாக உண்டாகும்.

வலியுடையானாயினும் ஒருவன் பலர்முன் எதிர்நிற்றலரிது

35\. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

(வ - ந.): பீலிபெய் சாகாடும் அப்பண்டம் சால மிகுத்து பெயின் அச்சு இறும்.

(ப - உ.): பீலி - மயிலிறகை; பெய் - ஏற்றிய; சாகாடும் - வண்டியும்; அப்பண்டம் சாலமிகுத்து பெயின் - அம்மயிலிறகை அது சுமக்குமளவினல்லாமல் மிகவும் அதிகப்படுத்தி ஏற்றினால்; அச்சு இறும் - அச்சு முறியும்.

பொறுக்கு மளவின்றி அதிகமாகச் சுமத்தினால் மயிலிறகு ஏற்றிய வண்டியின் அச்சு முறியும்.

ஓடுமீனேடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு

**36.** கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து.

(வ - ந): கூம்பும் பருவத்து கொக்கு ஒக்க; மற்று சீர்த்தவிடத்து அதன் குத்து ஒக்க.

(ப - உ): கூம்பும் பருவத்து - தொழில்மேற் செல்லாது இருக்கவேண்டுங் காலத்தில்; கொக்கு ஒக்க- கொக்கு (இரையைப் பார்த்துக்கூம்பி) இருப்பது போல் இருக்கக் கடவன்; மற்று சீர்த்தவிடத்து - செல்லுங் காலம் வாய்த்தபொழுது; அதன் குத்து ஒக்க - அது (தப்பாமற் குத்திக் கொல்வதுபோல) தப்பாமற் செய்து முடிக்கக் கடவன்.

தொழில்மேற் செல்ல வாய்ப்பில்லாத காலத்தில், கொக்கு இரையை எதிர்பார்த்து ஒடுங்கி இருப்பதுபோல் இருக்க; தொழில் செய்யுங்காலம் வாய்த்தபோது அது இரையைப் பிடிப்பதுபோல் தப்பாமற் செய்து முடிக்க.

நீர்வாழ் முதலையின் வலிமை நிலத்தில் குன்றும்

**37.** நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

(வ - ந): முதலை நெடும்புனலுள் பிற வெல்லும்; புனலின் நீங்கின் அதனை பிற அடும்.

(ப - உ): முதலை - முதலையானது; நெடும்புனலுள் - ஆழமுள்ள நீரில் இருக்கும்போது; பிற வெல்லும் - பிற உயிர்களை எல்லாம் வெல்லும்; புனலின் நீங்கின் - அந்நீரினின்றும் நீங்கினல்: அதனை பிற அடும் - அம்முதலையைப் பிற உயிர்கள் வெல்லும்.

ஆழமுடைய நீரில் முதலை பிறவற்றை வெல்லும்; அது அந்நீரினின்று நீங்குமாயின் அதனைப் பிற உயிர்கள் வெல்லும்.

...NARA PUBLIC LI...

பெருமை சிறுமைகளுக்குச் செயலே உரைகல்

38. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(வ - ந.): பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் கட்டளைக்கல் தம்தம் கருமமே.

(ப - உ): பெருமைக்கும் - (மனிதர் அடையும்) பெருமைக்கும்; ஏனை சிறுமைக்கும் - மற்றைய சிறுமைகளுக்கும்; கட்டளைக்கல் - உரைகல்; தம்தம் கருமமே - தங்கள் தங்கள் செயல்களே.

மக்கள், தாம் அடையும் பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல்லாவது அவரவர் செயல்களே.

கொடையும் தயையும் உடையவனைச் சுற்றம் சூழும்

39. பெருங்கொடையான் பேணன் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

(வ - ந): பெருங்கொடையான் வெகுளி பேணன் அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல்.

(ப - உ): பெருங்கொடையான் - (ஒருவன்) மிகுந்த கொடையை உடையவனாயினும்; வெகுளி பேணன் - கோபத்தை விரும்பானாய் (இருப்பின்); அவனின் - அவனைப்போல்; மருங்கு உடையார் - சுற்றமுடையார்; மாநிலத்து இல் - இப்பெரிய உலகத்தில் இல்லை.

ஒருவன் மிக்க கொடையாளியாயும் கோபத்துக்கு இடங்கொடாதவனுமாயின் அவனைப்போல் சுற்ற முடையார் இவ்வுலகத்திலில்லை.

முயன்றால் ஆகாததொன்றில்லை

40. அரியஎன்று ஆகாத இல்லைப்பொச் சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

(வ - ந.): பொச்சாவா கருவியான் போற்றி செயின் அரிய என்று ஆகாத இல்லை.

(ப - உ): பொச்சாவா - உறுதியுள்ள; கருவியான் - மனத்தால்; போற்றி செயின் - எண்ணிச் செய்தால்; அரிய என்று - (இவை செய்தற்கு) அரியது என்று சொல்லப்பட்டு; ஆகாத இல்லை - முடியாத காரியமில்லை.

உறுதியுடனும் கருத்துடனும் முயன்றால் ஆகாத காரியமில்லை.

அரசனுக்கு வெற்றி அளிப்பது நல் ஆட்சியே

**41.** வேல்அன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின்.

(வ - ந.): மன்னவன் வென்றிதருவது வேல் அன்று கோல்; அதுவும் கோடாது எனின்.

(ப - உ): மன்னவன் - அரசனுக்கு; வென்றி தருவது - (போரில்) வெற்றியைத்தருவது; வேல் அன்று - (அவன் எறியும்) வேற்படை அல்ல; கோல் - செங்கோலாகும்; அதுவும் - அக்கோலும்; (அவ்வாறு வெற்றி தருவது) கோடாது எனின் - (தான்) கோணுதிருக்குமாயின்.

நீதி தவறாத ஆட்சியே அரசனுக்குப் போரில் வெற்றியைக் கொடுப்பது; அவன் எறியும் வேலன்று.

மழையின்மை போன்றது அரசனது அருளின்மை

**42.** துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

(வ - ந): வேந்தன் அளி இன்மை வாழும் உயிர்க்கு, துளி இன்மை ஞாலத்திற்கு எற்று அற்று.

(ப - உ): வேந்தன் - அரசனது; அளி இன்மை - அருளில்லாமையானது; வாழும் உயிர்க்கு - (அவன் நாட்டில்) வாழும் குடிகளுக்கு; துளி இன்மை - மழையின்மையானது; ஞாலத்துக்கு எற்று அற்று - பூமியில் வாழும் உயிர்களுக்கு எவ்வகைத் துன்பந்தருமோ அவ்வகைத் துன்பம் தரும்.

அரசன், நாட்டுக்குடிகளிடத்து அருளில்லாதிருத்தல், மழையில்லாமை பூமியில் வாழும் உயிர்களுக்கு எவ்வகைத துன்பந்தருமோ அவ்வகைத் துன்பந் தரும்.

ஊக்கம் உடமையே பொருளுடைமை

43. உள்ளம்உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(வ - ந): உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும்.

(ப - உ): உள்ளம் உடைமை உடைமை - (ஒருவனுக்கு) ஊசகமுடைமையே (நிலைபெற்ற) உடைமையாகும்; பொருளுடைமை - மற்றைப் பொருளுடைமையானது; நில்லாது நீங்கிவிடும் - நிலைபெறாமல் நீங்கிப்போம்.

ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைபெற்ற உடைமையாகும்; மற்றைப் பொருளுடைமை நிலையானதன்று.

சோம்பல் பகைவனுக்கு அடிமையாக்கிவிடும்

44. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னூர்க்கு
அடிமை புகுத்தி விடும்.

(வ - ந): மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னூர்க்கு அடிமை புகுத்திவிடும்.

(ப - உ): மடிமை-சோம்பல் தன்மையானது; குடிமைக்கன் - உயர்குலத்தில் பிறந்தவனிடத்தே; தங்கின் - தங்குமாயின்; (அது) தன் ஒன்னூர்க்கு அடிமை புகுத்தி விடும் - தன் பகைவர்க்கு அடிமையாகுந் தன்மையைச் செய்துவிடும்.

உயர் பிறப்பினனாகியவனிடத்தே சோப்பல் தங்குமாயின், அது அவனைப் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும்.

முயற்சி பெருமை தரும்

45. அருமை யுடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(வ - ந.): அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்.

(ப - உ): அருமை உடைத்து என்று - (தமது சிறுமை நோக்கி நாம் இத்தொழிலை முடித்தல்) பிரயாசமென்று நினைத்து; அசாவாமை வேண்டும் - தளராதிருக்க வேண்டும்; பெருமை - (அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற) பெருமையை; முயற்சி தரும் - முயற்சி (தமக்கு) உண்டாக்கும்.

தம் சிறுமையை நோக்கி நாம் இக்கருமத்தை முடித்தல் அரிதெனக்கருதி முயற்சியில் சோர்வடைதல் ஆகாது. அதை முடித்தற்கேற்ற பெருமையைத் தமது முயற்சியே உண்டாக்கும்.

தொழில் முடித்தலையே இன்பமாக உடையவன் உறவினரைத் தாங்கும் தூணுவான்

46. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

(வ - ந): இன்பம் விழையான் வினை விழைவான் தன்கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண்.

(ப - உ): இன்பம் விழையான் - (தனக்கு) இன்பத்தை விரும்பாதவனுகி; வினை விழைவான் - தொழில் முடித்தலையே விரும்புவோன்; தன் கேளிர் - தன் சுற்றத்தாரது; துன்பம் துடைத்து - துன்பத்தைப்போக்கி; ஊன்றும் தூண் - (குடும்ப பாரத்தைத்) தாங்குவதாகிய தூணுவான்.

தனக்கு இன்பத்தை விரும்பாமல் தொழில் முடித்தலையே விரும்புகின்றவன் தன் உறவினரின் துன்பத்தை நீக்கி அவரைத் தாங்கும் தூணுவான்.

அமைச்சனின் குணங்களாவன ஐந்து

47. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

(வ - ந.): வன்கண் குடிகாத்தல் கற்று அறிதல் ஆள்வினை ஐந்துடன் மாண்டது அமைச்சு.

(ப - உ): வன்கண் - (தொழில் செய்யுமிடத்து) உறுதிப்பாடும்; குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும்: கற்று அறிதல் - (நீதி நூல்களைக்) கற்று (விதிவிலக்குகளை) அறிதலும்; ஆள்வினை - முயற்சியும்; ஐந்துடன் மாண்டது அமைச்சு - (முன் குறளிற் கூறிய) அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையவனே மந்திரியாவான். [முன் குறளிற் கூறியவை - சேனை, பொருள், காலம், செய்யும் விதம், அவ்விதத்தில் செய்யப்படும் அரிய தொழில்கள்.]

தொழில் செய்வதில் உறுதிப்பாடும், குடிகளைக் காத்தலும், நீதி நூல்களைக் கற்று விதிவிலக்குகளை அறிதலும், முயற்சியும் முன் குறளிற் கூறிய ஐந்து அங்கங்களுடனே நிறைவாக உடையவனே மந்திரியாவான்.

பாவத்தா லீட்டிய செல்வத்திலும் வறுமை நன்று

48. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(வ - ந): பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழி நல்குரவே தலை.

(ப - உ): பழிமலைந்து - (சான்றோரல்லாதவர் தீய தொழில்களைச் செய்து அதனால்) பழியைத் தம்மேற் கொண்டு; எய்திய - பெற்ற; ஆக்கத்தின் - செல்வத்தைக் காட்டிலும்; சான்றோர் - (அதுமேற் கொள்ளாத) சான்றோரனுபவிக்கும்; கழி நல்குரவே தலை - மிகுந்த வறுமையே உயர்ந்தது.

நல்ல அறிவில்லாதவர்கள் தீய செயல்களைச் செய்து அதனாற் பெற்ற செல்வத்தினும், அதனை மேற்கொள்ளாத அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தோர் அனுபவிக்கும் வறுமையே உயர்ந்தது

முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்

49. எண்ணிய எண்ணியாங்கு எய்துப வெண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

(வ - ந.): எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் எண்ணிய எண்ணி யாங்கு எய்துப.

(ப - உ): எண்ணியார் - (ஒரு பொருளை அடைய) எண்ணியவர்; திண்ணியராகப் பெறின்-(அப்பொருளுக்கு வழியாகிய தொழிலிடத்து) வலிமையுடையராகப் பெற்றால்; எண்ணிய - (தம்மால்) எண்ணப்பட்ட பொருள்களை எல்லாம்; எண்ணி யாங்கு எய்துப-எண்ணியபடியே அடைவர்.

ஒரு பொருளைப் பெற எண்ணியவர் அதைப் பெறுதற்கு வழியாகிய தொழிலை உறுதிப் பாட்டோடு செய்வரேல், அவர் அதனை எண்ணியபடியே பெறுவர்.

சூழ்ச்சியை நீடித்து வைத்தலாகாது

50. சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

(வ - ந.): சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல், அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

(ப - உ.): சூழ்ச்சி - ஆலோசனைக்கு; முடிவு-எல்லையாவது; துணிவு எய்தல் - (ஆலோசிப்பவன் இனி இது தப்பாதென்னும்) துணிவைப்பெறுதல்; அத்துணிவு - அத்துணிவு பெற்ற தொழில்; தாழ்ச்சியுள் தங்குதல் தீது- (பின்) நீடித்துத் தாழ்த்துதல் குற்றமுடையதாகும்.

ஆலோசனைக்கு எல்லையாவது ஒரு முடிவுக்கு வருதல்; அங்ஙனம் முடிவுக்கு வந்த செயல் உடனே செய்யப் படாவிடில் குற்றமுடையதாகும்.

அகத்தினழகு முகத்தில் தெரியும்

51. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

(வ - ந): அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும்.

(ப - உ): அடுத்தது - (தன்னை) அடுத்த பொருளினது நிறத்தைக்; காட்டும் - (தான்) கொண்டு காட்டுகிற; பளிங்குபோல் - கண்ணாடி போல்; நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில்; கடுத்தது முகம் காட்டும் - மிகுந்த குணத்தை முகம் (தான் கொண்டு) காட்டும்.

தன்னை அடுத்த பொருளின் நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்குபோல, ஒருவன் மனத்தில் மிக்கிருப்பதை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

நாட்டின் இயல்பு இது என்பது

52. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

(வ - ந.): நாடு, தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது.

(ப - உ): நாடு - நாடாவது; தள்ளா விளையுளும் - குறைவில்லாத விளைவு செய்வோரும்; தக்காரும் - நல்லவர்களும்; தாழ்விலாச் செல்வரும் - குறைவில்லாத செல்வமுடையோரும்: சேர்வது - கூடி வாழ்வதே.

குறைவில்லாத விளைவைச் செய்வோரும், நல்லவர்களும், குறைவில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாவது.

நல்லோர் நட்பு பிறைபோல் நாடோறும் வளரும்

53. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

(வ - ந.): நீரவர் கேண்மை பிறை நிறை நீர; பேதையார் நட்பு மதி பின் நீர.

(ப - உ.): நீரவர் - அறிவுடையோரது; கேண்மை- நட்பு; பிறை நிறை நீர - பிறைபோல (நாடோறும்) நிறையும் தன்மையினவாம்; பேதையார் நட்பு - அறிவிலாதவரது நட்பு; மதி - (நிறைந்த) சந்திரன்போல; பின் நீர - பின்னே (நாள் தோறும்) குறையுந் தன்மையன வாகும்.

அறிவுடையார் நட்புச் சந்திரனது பிறை நிறைவது போல் நாள்தோறும் வளரும் தன்மையுடையது; அறிவில்லாதார் நட்பு நிறைமதி பின் குறைவதுபோல் நாள்தோறும் குறையுந் தன்மையினது.

நல்லார் நட்பையே கொள்க

54. மருவுக மாசற்றார் கேண்மை ஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு.

(வ - ந): மாசு அற்றார் கேண்மை மருவுக; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக.

(ப - உ): மாசு அற்றார் - குற்றமற்றவரது; கேண்மை - நட்பை; மருவுக - பழகுக; ஒப்பு இலார் - (தனக்கு) சமானமில்லாதவரது; நட்பு - சிநேகத்தை; ஒன்று ஈத்தும் ஒருவுக -(அவருக்கு வேண்டிய) ஒன்றைக் கொடுத்தாயினும் விடக்கடவன்.

குற்றமற்றவர் நட்பையே பழகுக. தனக்கு ஒப்பில்லாதவரின் நட்பினை அறியாது கொண்டாராயின் அவர் வேண்டிய தொன்றைக் கொடுத்தாயினும் விடுக.

குலத்தளவே ஆகுமாம் குணம்

55. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

(வ - ந): அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்.

(ப - உ): அடுக்கிய கோடி பெறினும் - (பலவாக) அடுக்கிய கோடி அளவினதாகிய பொருளைப் பெற்றாலும்; குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியில் பிறந்தவர்; குன்றுவ செய்தலிலர் - (தம்மொழுக்கம்) குன்றும் தொழில்களைச் செய்யமாட்டார்கள்.

பலகோடி பொருளைப் பெருவதாயினும் உயர்குடிப் பிறந்தார் தம் ஒழுக்கங் குறையும் தொழிலைச் செய்யார்.

நல்லோர் அவமானம் வரின் உயிர்விடுவர்

56. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

(வ - ந): மயிர் நீப்பின் வாழா கவரிமா அன்னர் மானம் வரின் உயிர் நீப்பர்.

(ப - உ): மயிர் நீப்பின் - (தன் மயிர்த்திரளில்) ஒரு மயிர் நீங்கினும்; வாழா - உயிர் வாழாத; கவரிமா அன்னர் - கவரிமாவை ஒப்பவர்; மானம் வரின் - (உயிர் நீக்கு தற்கான) அவமானம் வந்தால்; உயிர் நீப்பர் - உயிரை விடுவர்.

தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும் கவரிமான் உயிர்வாழாது. அதுபோல மானமுடையவர்கள் உயிர் விடத்தக்க அவமானம் வரின் அதனைத் தாங்காது இறப்பர்.

இருக்கும் இடத்தின் உயர்வுதாழ்வு பெருமை சிறுமை ஆகா

57. மேலிருந்தும் மேல்அல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழ்அல்லார் கீழல் லவர்.

(வ - ந.): மேல்அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர்; கீழ் அல்லவர் கீழிருந்தும் கீழ் அல்லார்.

(ப - உ): மேல் அல்லார் - சிறியராயினர்; மேல் இருந்தும் - உயர்ந்த ஆசனங்களில் இருந்தாராயினும்; மேல் அல்லர் - பெரியவரல்லர்; கீழ் அல்லவர் - பெரிய ராயினர்; கீழ் இருந்தும் - தாழ்ந்த வெறு நிலத்தில் இருந்தாராயினும்; கீழ் அல்லார் - சிறியராகார்.

மேலான இடத்திலிருந்தாலும் மேன்மையில்லாதார் மேன்மக்களாகார். கீழான இடத்திலிருந்தாலும் கீழ்மை யில்லாதார் கீழ் மக்களாகார்.

சால்பு என்னும் குணத்தைத் தாங்கும் தூண்கள் ஐந்து

58. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

(வ - ந.): அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மையோடு சால்பு ஊன்றிய தூண் ஐந்து.

(ப - உ): அன்பு - (சுற்றத்தார் மேலன்றிப் பிறர் மீதும உண்டாகிய) அன்பும்; நாண்-(பழிபாவங்களுக்கு) நாணுதலும்; ஒப்புரவு-(யாவரிடத்தும்) உபகாரம் செய்தலும்; கண்ணோட்டம் - (பழகியவரிடத்துத்) தாட்சணியமும்; வாய்மையோடு - எவ்விடத்தும் மெய்பேசுதலும் என; சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பு என்னும் (பாரத்தைத்) தாங்கிய தூண்கள் ஐந்தாகும்.

சுற்றத்தார்மேலும் பிறர்மேலும் உள்ள அன்பும், பழிபாவங்களுக்கு நாணுதலும், யாவருக்கும் உபகாரம் செய்தலும், பழகியவரின் முகம் மறுக்க மாட்டாமையும், எவ்விடத்தும் மெய் கூறுதலும் ஆகிய ஐந்தும் சால்பு (நிறைந்த நற்குணங்கள்) என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்களாம்.

தன் குடும்பத்தை உயரச்செய்து வாழ்பவனைச் சுற்றம் சூழும்

**59.** குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

(வ - ந.): குற்றம் இலன் ஆய் குடி செய்து வாழ்வானை சுற்றம் ஆ உலகு சுற்றும்.

(ப - உ): குற்றம் இலன் ஆய் - குற்றமானவற்றைச் செய்யாது; குடிசெய்து - (தனது) குடியை உயரச் செய்து; வாழ்வானை - வாழ்கின்றவனை; சுற்றம் ஆ - (அவனுக்கு) உறவாக வேண்டி; உலகு சுற்றும் - உலகத்தார் (தாமே சென்று) சூழ்வர்.

குற்றங்கள் புரியாது தன் குடியை உயரச்செய்து ஒழுகுவானை, அவனுக்குச் சுற்றமாக வேண்டி உலகத்தார் தாமே சென்று சூழ்வர்.

தம்முயற்சியால் மாழ்வாரே பிறர்க்கு ஒன்று ஈவார்

**60.** இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது
கைசெய்து ஊண் மாலை யவர்.

(வ - ந.): கை செய்து ஊண் மாலையவர் இரவார்; இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர்.

(ப - உ): கை - (தன்) கையால்; செய்து - (உழுதல்) செய்து; ஊண் மாலையவர் - உண்ணுதலை இயல்பாக உடையவர்: இரவார் - (பிறரைத்தாம்) பிச்சை கேளார்; இரப்பார்க்கு - (தம்மை) இரப்பவர்க்கு; ஒன்று கரவாது ஈவர் - அவர் (வேண்டியது) ஒன்றை ஒளிக்காமல் கொடுப்பார்.

தமது கையால் உழுகின்றவர், பிறரிடம் ஒரு பொருளைக் கேளார்; தம்மிடம் ஒன்றைக் கேட்பவர்க்கு அவர் வேண்டியவற்றை இல்லை என்னுமல் கொடுப்பர்.

---

# அருஞ்சொல் அகர வரிசை

அகம் - மனம்
அசாவாமை - தளராமை
அடுக்கியகோடி - பலகோடி
அடும் - வெல்லும்
அணி - ஆபரணம்
அமர்ந்து - மலர்ந்து
அரங்கு - காய்கள் உருட்டி விளையாடும் கோடு
அழுக்காறு - பொறாமை
அளி - அருள்
அற்று - போலும்
அனைத்து - அவ்வளவு
ஆக்கம் - செல்வம்
ஆங்கு - அப்படியே
ஆர்வலர் - அன்புடையார்
ஆள்வினை - முயற்சி
ஆன்ற - நிறைந்த
இசை - புகழ்
இயல்பு - தன்மை
இழுக்கம் - தவறுதல்
இறை - அரசன்
இன்னா - துன்பம்
ஈத்து - கொடுத்து
உயிர்நிலை - உடம்பு
உய்த்தல் - செலுத்தல்
உவக்கும் - மகிழும்
உவமை - ஒப்பு
உள்ளல் - நினைத்தல்
ஊக்கம் - மன எழுச்சி
ஊதியம் - பயன்

எய்துவர் - அடைவர்
எனல் - என்று நினையாதீர்கள்
ஒப்புரவு - உபகாரம்
ஒரு - ஒப்பில்லாத
ஒருவுக - நீக்குக
ஒறுத்தல் - தண்டித்தல்
ஒன்னார் - பகைவர்
ஓம்புதல் - காத்தல்
கடுத்தது - மிக்கது
கட்டளைக்கல் - உரைகல்
கண்ணோட்டம் - பழகின வரிடத்து முகம் மறுக்க மாட்டாமை
கருவி - மனம்
கழி - மிக்க
காண்கிற்பின் - காணவல்லையின்
குடிமை - உயர் பிறப்பு
கூம்புதல் - ஒடுங்குதல்
கேண்மை - நட்பு
கேளிர் - உறவினர்
கோடுதல் - கோணுதல்
கோட்டி - சபை
சாகாடு - வண்டி
சால - மிக
சால்பு - நிறைவு
சான்றோர் - அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தோர்
சீர்த்தல் - வாய்த்தல்

சூழ்ச்சி - ஆலோசனை
செய்யாள் - திருமகள்
செற்று - கெடுத்து
ஞாலம் - உலகம்
தகைத்து - சிறப்பினை
உடையது
தள்ளா - குறைவில்லாத
தாழ் - தாழ்ப்பாள்
தாழ்ச்சி - தாமதம்
தாள் - பாதம்
திண்ணியர் - வலியர்
திரு - செல்வம்
திறன் - தகுதி
தீயுழி - நரகம்
துடைத்தல் - போக்குதல்
துணை - அளவு
துளி - மழை
தேற்றாதவர் - அறியாதவர்
தொடுதல் - தோண்டுதல்
தோற்றம் - வேடம்
நக - மகிழ
நல்குரவு - வறுமை
நயன் - உபகாரம்
நன்றி - உதவி
நாண் - பழிபாவங்களுக்கு
மனம் கூசுதல்
நீர - தன்மையுடைய
நெடும் - ஆழமான
பசு - பிரிய
பணிவு - வணக்கம்
பயன் - பழம்
பழி - பாவம்
பளிங்கு - கண்ணாடி
பீலி - மயிலிறகு
புல் - கீழ்மை
புனல் - நீர்
பெயர்த்து - மறுபடியும்
பெய் - ஏற்று
பேதை - அறிவில்லாதவன்
பேணி - பாதுகாத்து
பொச்சாவா - மறவாத
பொன்றும் - அழியும்
மடிமை - சோம்பல்
மருங்கு - பக்கம
மலைந்து - செய்து
மாட்டு - இடத்து
மான - மிக
மாலையவர் - இயல்பாக
உடையவர்
வட்டு - சூதுவிளையாடும் காய்
வன்கணவர் - கொடியவர்
வன்கண் - அசைவின்மை
விளையுள் - விளையச் செய்
வோர்
வெஃகா - விரும்பாத
வெகுளி - கோபம்
வென்றி - வெற்றி
வேந்தர் - அரசர்

CONNEMARA PUBLIC LIBRARY
29 JAN 1958

# திருக்குறள் - எழுபது

பதவுரை விளக்க உரைகளுடன்

மூன்றும் பாகம்

(3-ஆம் பாரம் அல்லது 8-வது வகுப்புக் குரியது)

[1948-ல் வெளிவந்த அரசினர் பாடத் திட்டத்திற் கமைய வெளியிடப்பட்டுள்ளது]

...MARA PUBLIC LIB...
2 9 JAN 1958

[*Approved for Class Libraries ; Vide Page 121, Part II, Consolidated List dated 19th May 1954.*]

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

**53-56, பவழக்காரத் தெரு : : சென்னை 1**

பதிப்புரிமை] 1954 [விலை அணா 4

# திருவள்ளுவர்

வள்ளுவன் என்பது பழங்காலத்து அரசனது கருமத் தலைவருள் ஒருவனுக்கு வழங்கிய உத்தியோகப் பெயர். இவனுடைய தொழில், யானையின் பிடர்மீது இருந்து அரச கட்டளையை மக்களுக்கு விளம்பரப்படுத்துதல். திருக்குறளைச் செய்த ஆசிரியர் தமிழ் அரசன் ஒருவனிடம் வள்ளுவ உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய இயற்பெயர் மறக்கப்பட்டது. ஆகவே, அவர் வள்ளுவர் என்னும் உத்தியோகப் பெயரால் அறியப்பட்டார். வள்ளுவர் என்பது கணக்கன் என்பது போன்ற வழக்கு. பிற்காலத்தில் வள்ளுவன் என்னும் பெயர் பறைக்குலத்தவரைக் குறிக்க வழங்கிற்று. ஆகவே, அவரைப் பறைக்குலத்தவரென்று பிற்காலத்தவர் தப்பாகக் கருதலாயினர். வள்ளுவர் செய்த நூலுக்கு இடப்பட்ட பெயர் யாது என அறியப்படவில்லை. அந்நூல் குறள் வெண்பாவினால் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அது குறள் என வழங்கப்பட்டு வருகின்றது. திரு என்பது உயர்வு கருதி இட்டு வழங்கப்படும் சிறப்புச் சொல். திருக்குறளைக் கொண்டு அவர் சமயத்தை அறியமுடியவில்லை. வினை, உயிர், பிறப்பு, கடவுள், தீவினை, அறம் போன்ற தத்துவக் கருத்துக்களைப்பற்றிப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் வரும் தனித் தமிழ்ச் சொற்களைக் கொண்டு நன்கு அறியலாம். இக் கருத்துக்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. பழந்தமிழர் சமயமும் இவ்வகையினதே. திருவள்ளுவர் சைவ மதத்தினர் எனக்கொண்டு அவருடைய வடிவை உருத்திராக்க வடங்கள் அணிந்தவராகவும் திருநீற்றுப் பூச்சுடையவராகவும் அமைத்துக் காட்டுவர் சிலர். சங்ககாலத்தில் உருத்திராக்க வடம் பூணும் வழக்கு காணப்படவில்லை.

திருவள்ளுவர் இற்றைக்கு 1,800 ஆண்டுகளின் முன் வாழ்ந்தார். அவரது பிறப்பிடம் மதுரை எனத் திருவள்ளுவ மாலைச் செய்யுளொன்றால் அறியப்படுகின்றது. திருவள்ளுவரைப் பற்றிய ஏனைய வரலாறுகளையும், அவற்றின் ஆராய்ச்சி முடிவுகளையும் திருவள்ளுவர் என்னும் எமது விரிந்த நூலிற் காண்க.

ந. சி. க.

2 9 JAN 1956

# திருக்குறள் — எழுபது

## மூன்றும் பாகம்

கடவுளை என்றும் நினைப்பவர் முத்தி உலகில் வாழ்வார்

1. மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலம்மிசை நீடு வாழ்வார்.

(வ - ந.): மலர்மிசை ஏகினன் மாண் அடி சேர்ந்தார் மிசை நிலம் நீடு வாழ்வார்.

(ப - உ.): மலர்மிசை - (அன்பரது நெஞ்சமாகிய) தாமரை மலரில்; ஏகினன் - சென்ற கடவுளது; மாண் அடி - பெருமை பொருந்திய பாதங்களை; சேர்ந்தார் - (இடைவிடாது) நினைப்பவர்; மிசை நிலம் - (எல்லா உலகங்களுக்கும்) மேலாகிய முத்தி உலகத்தில்; நீடு வாழ்வார் - அழிவில்லாமல் வாழ்வார்.

அன்பரின் இருதயமாகிய தாமரைமலரில் சென்றிருப்பவராகிய கடவுளை நினைப்பவர் மேலாகிய முத்தி உலகத்தில் அழிவின்றி வாழ்வார்.

அரிய செயல்களைச் செய்வோர் பெரியர்

2. செயற்குஅரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்.

(வ - ந): பெரியார் செயற்கு அரிய செய்வர்; சிறியர் செயற்கு அரிய செய்கலாதார்.

(ப - உ.): பெரியார் - (ஒத்த பிறப்பினராகிய மனிதருள்) பெரியவர்; செயற்கு அரிய செய்வார் - செயற்கு அரியவற்றைச் செய்வர்; சிறியர் - சிறியோர்; செயற்கு அரிய செய்கலாகாதார் - செய்தற்கு அரியவற்றைச் செய்யமாட்டாதவராவர்.

மக்களுள் செய்தற்கு அரிதாகிய ஐம்புலன்களை அடக்குதலைச் செய்வார் பெரியர்; அவ்வாறு செய்ய மாட்டாதார் சிறியர்.

மன அழுக்கின்மையே அறன்

3. மனத்துக்கண் மாசுஇல னாதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

(வ - ந.): மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்; பிற ஆகுல நீர.

(ப - உ.): மனத்துக்கண் மாசு இலன் ஆதல் - நெஞ்சிடத்தே குற்றமில்லாதவனாக இருத்தல்; அனைத்து அறன் - எல்லா தருமமுமாகும்; பிற ஆகுல நீர - அது ஒழிந்த சொல்லும் வேடமும் (அறம் எனப்படுவனல்ல) ஆரவார குணத்தை உடையனவாம்.

தன் மனத்தில் குற்றமிலனாக இருத்தலே எல்லா அறமும் ஆகும். அஃதல்லாத சொல்லும் வேடமும் அறம் எனப்படா; ஆரவார குணமுடையன.

இல்வாழ்க்கைக்குச் சிறப்பு அன்பும் அறனும்

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(வ - ந.): இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் அது பண்பும் பயனும்.

(ப - உ.): இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கையானது; அன்பும் - (தன் மனையாளிடத்தில் செய்யத் தகும்) அன்பினையும்; அறனும் - பிறர்க்குப் பகுத்துண்ணுதலாகிய அறத்தினையும்; உடைத்து ஆயின் - உடையதானால்; அது பண்பும் பயனும் - அவ்வுடைமையானது (அவ்வில் வாழ்க்கைக்கு) குணமும் பிரயோசனமும் ஆம்.

ஒருவனிடத்தில், மனைவியிடத்து அன்பும் பிறர்க்குக் கொடுத்து உண்டலாகிய அறமும் உண்டாயின், அவ்வுடைமை இல்வாழ்க்கைக்குச் சிறப்பாகும்.

தந்தை மகனுக்குப் புரியும் உதவி

5. தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(வ - ந.): தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்.

(ப - உ): தந்தை - தகப்பனானவன்; மகற்கு - புதல்வனுக்கு; ஆற்றும் நன்றி - செய்யத்தகும் நன்மையாவது: அவையத்து முந்தி இருப்பச் செயல் - கற்றவரது சபையில் (அவரினும்) மேம்பட்டிருக்க (கல்வியுடையவன்) ஆக்குதல்.

தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மை, கற்றூர் சபையில் தன்னினும் மேம்பட்டிருக்குமாறு அவனைக் கல்வி கேள்வி உடையனாக்குதல்.

பாவத்தைப் போக்குவதற்கும் துணை அன்பு

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

(வ - ந.): அறியார் அன்பு அறத்திற்கே சார்பு என்ப; மறத்திற்கும் அஃதே துணை.

(ப - உ): அறியார் - அறியாதவர் (சிலர்); அன்பு - அன்பானது; அறத்திற்கு சார்பு என்ப - தருமத்துக்குத் துணையாவது என்று சொல்லுவர்; மறத்திற்கும் அஃதே துணை - பாவத்தை நீக்குதற்கும் அந்த அன்பே துணையாவது.

அறியாதவர் அறம்செய்வதற்கே அன்பு துணை எனக் கூறுவர்; பாவத்தை நீக்குவதற்கும் அன்பே துணையாகும்.

வேறுபட்டுப் பார்க்க விருந்தினர் முகம் வாடும்

7. மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(வ - ந.): அனிச்சம் மோப்ப குழையும்; முகம் திரிந்து நோக்க விருந்து குழையும்.

...ARA PUBLIC L...

(ப - உ.): அனிச்சம் - அனிச்சப் பூவானது; மோப்ப - மோந்த அப்பொழுதே; குழையும் - வாடும்; முகம் திரிந்து நோக்க - (விருந்தளிப்பவரின்) முகம் வேறுபட்டு நோக்க; விருந்து - விருந்தாக வந்தவர்; குழையும் - வாடுவர்.

அனிச்சப்பூ மோந்தாலன்றி வாடாது; (விருந்தளிப்பவரின்) முகம் வேறுபட்டு நோக்க விருந்தினர் வாடுவர்.

கனியிருக்கக் காயை உண்ணுவது ஏனோ ?

8. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந்த அற்று.

(வ - ந): இனிய உள ஆக இன்னாத கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்த அற்று.

(ப - உ.): இனிய உள் ஆக - இனிய சொற்கள் (தன்னிடத்தே) உண்டாயிருக்க; (அவற்றைச் சொல்லாமல்) இன்னாத கூறல் - இனிமையில்லாத சொற்களை (ஒருவன்) சொல்லுதல்; கனி இருப்ப - (இனிய) கனிகள் தன்னிடத்தே இருக்க; (அவற்றைத் தின்னாது) காய் - (இனிமையில்லாத) காய்களை; கவர்ந்த அற்று - தின்பதனோடு ஒக்கும்.

இனிய சொற்களைக் கூறாது இனிமையில்லாத கொடுஞ் சொற்களை ஒருவன் கூறுதல் தன் கையிடத்துள்ள கனிகளை உண்ணாது இனிமையில்லாத காய்களை உண்பதனோடு ஒக்கும்.

பயன் கருதாது செய்த உதவி இவ்வுலகினும் வானுலகினும் பெரிது

9. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

(வ - ந.): செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

(ப - உ.): செய்யாமல் - (தனக்கு முன் ஒரு உதவியும்) செய்யாதிருக்க; செய்த உதவிக்கு - (ஒருவன் பிற

னுக்குச்) செய்த உதவிக்கு; வையகமும் - மண்ணுலகத்தையும்; வானகமும் - விண்ணுலகத்தையும்; (ஈடாகக் கொடுத்தாலும்) ஆற்றல் அரிது - சமமாகாது.

தனக்குமுன் ஒரு உதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாருகக் கொடுத்தாலும் சமமாகாது.

நன்மை உண்டாவதாயினும் நடுநிலை தவறுதலாகாது

10. நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

(வ - ந.) நன்றே தரினும் நடு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்.

(ப - உ.) நன்றே தரினும் - (தீங்கின்றி) நன்மையே தரினும்; நடு இகந்து - நடுநிலைமை நீங்கலால்; ஆம் ஆக்கத்தை - உண்டாகின்ற செல்வத்தை; அன்றே ஒழிய விடல் - அப்போதே நீக்கக்கடவன்.

நன்மையே தருவதாயினும் நடுநிலை தவறுதலால் உண்டாகின்ற செல்வத்தை அப்பொழுதே நீக்கி விடுக.

எதை அடக்காவிடினும் நாவை அடக்குக

11. யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

(வ - ந) யா காவார் ஆயினும் நா காக்க; காவாக்கால் சொல் இழுக்குப் பட்டு சோகாப்பர்.

(ப - உ.) யா - (காக்க வேண்டுவன) யாவையும்; காவார் ஆயினும் - காக்க மாட்டாராயினும்; நா காக்க - நா ஒன்றையேனும் காக்கக் கடவர்; காவாக்கால் - (அதனைக்) காக்கமாட்டாராயின்; சொல் இழுக்குப்பட்டு - சொற் குற்றத்திலே அகப்பட்டு; சோகாப்பர் - (தாமே) துன்பப்படுவர்.

தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க முடியாதாயினும் நா ஒன்றைக் காக்க; அதனைக் காவாராயின் சொற்குற்றம் ஏற்பட்டுத் தாமே துன்புறுவர்.

உலகநடையை அறியாதவர்க்கு நூலறிவால் பயனில்லை

12. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்.

(வ - ந.) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் பல கற்றும் அறிவிலாதார்.

(ப - உ.) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் - உலக நடைக்கு ஏற்ப நடத்தலை; கல்லார் - பழகிக்கொள்ளாதவர்; பல கற்றும் - பல நூல்களைக் கற்றாராயினும்; அறிவு இலாதார் - அறிவு இல்லாதவராவர்.

உலக நடைக்கேற்ப ஒழுகுதலைப் பழகிக் கொள்ளாதவர், பல நூல்களைக் கற்றாராயினும் அறிவில்லாதவராவர்.

ஒருவன் செய்த தீமையை மறத்தல் நன்று

13. பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

(வ - ந.) இறப்பினை என்றும் பொறுத்தல்; மறத்தல் அதனினும் நன்று.

(ப - உ.) இறப்பினை - (ஒருவன் செய்த) தீமையை; என்றும்-தன்னால் தண்டித்தற்குக் கூடிய காலத்திலேயும்; பொறுத்தல் - பொறுக்கக் கடவன்; மறத்தல் - (அதனை நினையாமல் அப்பொழுதே) மறக்கின்; அதனினும் நன்று - அப்பொறுமையினும் மிக நல்லது.

தாம் தண்டிக்கக் கூடிய காலத்தும் பிறர் செய்த தீமையைப் பொறுக்க; அதனை உடனே மறந்துவிடக் கூடுமாயின் அது அப் பொறுமையினும் நன்று.

நல்லார் பிறர் பொருளை விரும்பார்

14. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(வ - ந.) புலம் வென்ற புன்மையில் காட்சியவர் இலம் என்று வெஃகுதல் செய்யார்.

(ப - உ): புலம்வென்ற - ஐம்புலன்களையும் வென்ற; புன்மை இல் காட்சியவர் - குற்றமில்லாத அறிவையுடையவர்; இலம் என்று வெஃகுதல் செய்யார் - வறியோம் என்று நினைத்து (அது தீர்த்தற் பொருட்டுப் பிறர் பொருளை) விரும்பமாட்டார்.

ஐம்புலன்களையும் வென்ற அறிவுடையோர் தாம் வறியர் என்று நினைத்து அது தீர்த்தற்குப் பிறர் பொருளை விரும்பார்.

கண்ணெதிரே குறைகூறினும் புறங்கூறுதே

15. கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்னோக்காச் சொல்.

(வ - ந.): கண் நின்று கண் அற சொல்லினும் முன் இன்று பின் நோக்காச்சொல் சொல்லற்க.

(ப - உ): கண் நின்று - (ஒருவனை) எதிரே நின்று; கண் அற - முகம் முறிய (தாட்சணியமின்றி); சொல்லினும் - சொன்னாலும்; முன் இன்று - (அவன்) எதிரில் இல்லாமல்; பின் நோக்காச் சொல் - பின் வருங் குற்றத்தை நோக்காத சொல்லை; சொல்லற்க - சொல்லாதொழிக.

நீ ஒருவன் கண் முன்னே முகம் முறியச் சொன்னாலும் அவன் எதிலிரில்லாதபோது அவனைப் புறங்கூறாதொழிக.

பயனில்லாத வார்த்தைகளைக் கூறுதே

16. சொல்லுக சொல்லின் பயனுடைய; சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல்.

(வ - ந.): சொல்லின் பயனுடைய சொல்லுக; சொல்லின் பயன் இலாச் சொல் சொல்லற்க.

(ப - உ.): சொல்லின் - சொல்லவேண்டுமாயின்; பயன் உடைய - பிரயோசனமுடைய சொற்களை; சொல்லுக - சொல்லக் கடவர்; சொல்லின் - சொல்லவேண்டுமாயின்;



...MARA PUBLIC LIB...

பயன் இலாச் சொல் - பிரயோசனமில்லாத சொற்களை ; சொல்லற்க - சொல்லாதிருக்கக் கடவர்.

சொல்லவேண்டுமாயின் பயனுடைய சொற்களைச் சொல்லுக ; பயனில்லாத சொற்களைச் சொல்லாது ஒழிக.

உனது நன்மையை விரும்பினுல் தீமைகளைச் செய்யற்க

**17.** தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

(வ - ந.): தன்னைத்தான் காதலன் ஆயின் தீவினைப் பால் எனைத்து ஒன்றும் துன்னற்க.

(ப - உ.): தன்னைத்தான் காதலன் ஆயின் - (ஒருவன்) தனது நலனை விரும்புவானுயின் ; தீவினைப்பால் - தீவினையாகிய பிரிவினுள் ; எனைத்து ஒன்றும் - எவ்வளவு சிறியது ஒன்ருயினும் ; துன்னற்க - (பிறரிடத்தே) செய்யாதிருக்கக் கடவன்.

ஒருவன் தனது நலனை விரும்புவானுயின், எவ்வளவு சிறிய தீவினையையும் பிறரிடத்தில் செய்யாதிருப்பானுக.

நமது கடமையை அறிந்தவர் உபகாரம் செய்வதில் தளரார்

**18.** இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன் அறி காட்சியவர்.

(வ - ந.): கடன் அறி காட்சியவர், இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்.

(ப - உ.): கடன் - (தாம் செய்யத் தகுவனவாகிய) கடமைகளை ; அறி - அறிந்த ; காட்சியவர் - இயற்கை அறிவை உடையவர் ; இடன் இல் பருவத்தும் - செல்வம் சுருங்கிய காலத்தும் ; ஒப்புரவிற்கு ஒல்கார் - உபகாரம் செய்வதற்குத் தளரார்.

தாம் செய்யத்தகும் கடமைகளை அறிந்த அறிவுடையார் செல்வம் சுருங்கிய காலத்தும் உபகாரம் செய்வதற்குத் தளரார்.

பசியைத் தணிப்பார் நோற்பாரிற் பெரியர்

**19.** ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

(வ - ந): ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல், (அவ்வாற்றல்) அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்.

(ப - உ.): ஆற்றுவார் ஆற்றல் - (தவத்தால்) வலியார்க்கு வலிமையாவது ; பசிஆற்றல்-பசியைப் பொறுத்தல்; (அவ்வலிதான்) அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை (ஈகையால்) ஒழிப்பாரது வலிமைக்குப்பின்.

தவத்தால் வலியவர்களுக்கு வலிமையாவது பசியைப் பொறுத்தல்; அவ் வலிமைதானும் பசியை ஈகையினால் போக்குவாரின் வலிமைக்குத் தாழ்ந்ததே.

புகழ் உண்டாக வாழமாட்டாதவர் தம்மை இகழ்வாரை நோவது ஏன் ?

**20.** புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன் ?

(வ - ந.): புகழ்பட வாழாதார் தம் நோவார், இகழ்வாரை நோவாது எவன்.

(ப - உ.): புகழ்பட வாழாதார் - (தமக்குப்) புகழ் உண்டாகுபபடி வாழமாட்டாதவர் ; (அதுகாரணமாகப் பிறர் இகழ்ந்தவிடத்து) தம் நோவார் - (இவ்விகழ்ச்சி நமது குறைபாட்டினால் வந்ததென்று) தம்மை நொந்து கொள்ளாது ; தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வது ஏனோ?

புகழுண்டாகும்படி வாழ்மாட்டாதவர், பிறர் தம்மை இகழின் அவ்விகழ்ச்சி தமது இயலாமையால் வந்ததென்று தம்மை நோவாது இகழ்ந்தவரை நொந்துகொள்வது ஏனோ?

குற்றங்களை ஒழித்துவிடின் வேடம் வேண்டியதில்லை

**21.** மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

(வ - ந.) : உலகம் பழித்தது ஒழித்துவிடின் மழித்தலும் நீட்டலும் வேண்டா.

(ப - உ.) : உலகம் - உயர்ந்தோரால்; பழித்தது - (தவத்திற்கு ஆகாதென்று) குற்றஞ்சொல்லப்பட்ட ஒழுக்கத்தை; ஒழித்துவிடின் - நீக்கி விடுவாராயின்; மழித்தலும் - (தவஞ்செய்வோர்க்குத் தமது மயிரை) முண்டிதஞ் செய்தலும்; நீட்டலும - அதனைச் சடையாக்கலும் (அல்லது வளர்த்தலும்); வேண்டா - வேண்டுவனவல்ல.

தவத்திற்கு ஆகா என்று உயர்ந்தோர் விலக்கிய ஒழுக்கங்களை நீக்கிவிடின் தவம் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும் வளர்த்தலும் ஆகிய வேடங்கள் வேண்டா.

வஞ்சனையாலாகிய செல்வம் வளர்வதுபோல் தோன்றிக் கெடும்

22. களவினன் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

(வ - ந) : களவினல் ஆகிய ஆக்கம் ஆவதுபோல் (தோன்றி) அளவு இறந்து கெடும்.

(ப - உ) : களவினல் - (பிறரை) வஞ்சித்தலால்; ஆகிய ஆக்கம் - உண்டாகிய செல்வம்; ஆவதுபோல - வளர்வதுபோலத் (தோன்றி); அளவு இறந்து கெடும் - தனது எல்லையைக் கடந்து அழியும்.

களவினுலுண்டாகிய பொருள் வளர்வது போல் தோன்றி அளவு கடந்து கெடும்.

பிறரறியாரென்று பொய்கூறின் தன்னெஞ்சே வருத்தும்

23. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(வ - ந) : தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

(ப - உ.) : தன்நெஞ்சு - (ஒருவன்) தனது நெஞ்சினலே; அறிவது - (பொய்யென்று) அறியப்பட்டதை; பொய்யற்க - (பிறர் அறிந்திலரென்று) மெய்போல் காட்டற்க; பொய்த்தபின் - பொய்த்தானயின்; தன்நெஞ்சே

(அதனை அறிந்து) தனது நெஞ்சே; தன்னைச் சுடும் - (அப் பாவத்துக்குச் சாட்சியாய் நின்று) தன்னை வருத்தும்.

ஒருவன் தான் பொய் என்றறிந்தவொன்றைப் பிறர் அறிந்திலர் என்று மறைப்பது தவறு; மறைத்தபின் அவனது நெஞ்சே அவனை வருத்தும்.

கோபம் முகமலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் போக்கும்

24. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

(வ - ந): நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பிற பகையும் உளவோ.

(ப - உ): நகையும் - முகமலர்ச்சியையும்; உவகையும் - மகிழ்ச்சியையும்; கொல்லும் சினத்தின் - கெடுத்து எழுகின்ற கோபத்தின்; பிறபகையும் உளவோ-வேறாகிய பகைகளும் உண்டோ.

முகமலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் கெடுத்து எழுகின்ற கோபத்தைக் காட்டிலும் ஒருவருக்கு வேறு பகைகளும் உளவோ?

தீமை செய்தவர் நாணும்படி உபகாரம் செய்க

25. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

(வ - ந.): இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நல் நயம் செய்து விடல்.

(ப - உ.): இன்னா செய்தாரை - (தமக்கு) துன்பம் தருபவற்றைச் செய்தவரை; ஒறுத்தல் - தண்டித்தலாவது; அவர் நாண - அவர் நாணும்படி; நல்நயம் செய்து விடல்- (அவருக்கு) இனிமையான மகிழ்ச்சிகளைச் செய்து (அவ் விரண்டையும்) மறத்தலாம்.

தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தலாவது, அவர் நாணும்படி அவருக்கு நன்மைகளைச் செய்து (அவ் விரண்டனையும்) மறத்தலாகும்.

நீதி ஆட்சிபுரியும் அரசன் கடவுளுக்குச் சமானமானவன்

26. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.

(வ - ந.): முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்.

(ப - உ): முறைசெய்து - நீதிசெலுத்தி; காப்பாற்றும் - (பிறர் வருந்தாமல்) காத்தல்செய்யும்; மன்னவன் - அரசன்; (பிறப்பால் மனிதனேயாயினும்) மக்கட்கு - மனிதருக்கு; இறை என்று-(செயலினலே) கடவுளென்று; வைக்கப்படும் - வைக்கப்படுவான் (மதிக்கப்படுவான்).

நீதி செலுத்திப் பிறர் வருந்தாமல் காக்கின்ற அரசன் பிறப்பால் மனிதனாயினும் செயலால் கடவுளென்று மதிக்கப்படுவான்.

கல்வியே அழிவில்லாத செல்வம்

27. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை அவை.

(வ - ந.): ஒருவற்கு கேடுஇல் விழு செல்வம் கல்வி, மற்றை அவை மாடு அல்ல.

(ப - உ.): ஒருவற்கு - ஒருவனுக்கு; கேடு இல் விழு செல்வம் கல்வி - அழிவில்லாத சிறப்பாகிய செல்வம் படிப்பாகும்; மற்ற அவை - அஃது அல்லாத மணியும் பொன்னும் ஆகிய செல்வம்; மாடு அல்ல - செல்வமல்ல.

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வமானது கல்வி; அஃது அல்லாத மணியும் பொன்னும் செல்வமல்ல.

கல்லாதவர் விலங்கை ஒப்பர்

28. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

(வ - ந): இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் விலங்கொடு மக்கள் அனையர்.

(ப - உ): இலங்கு நூல் - விளங்கிய நூலை; கற்றாரோடு ஏனையவர் - கற்றவருடன் கல்லாதவர்; விலங்கொடு மக்கள் அனையர் - மிருகங்களோடு மனிதரை ஒப்பிடின் அத்தன்மைய ராவர். (விளங்குதல் - மேம்படுதல்.)

விலங்கோடு நோக்க மக்கள் எவ்வளவு மேன்மை உடையரோ, அத்துணைத் தாழ்ந்தவர் நூலைக் கற்றவரோடு நோக்கக் கல்லாதவர்.

கல்லாதவர், கற்றார் கூறும் அறிவுரைகளைக் கேட்கவேண்டும்

29. கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

(வ - ந): கற்றிலன் ஆயினும் கேட்க; அஃது ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்று ஆம் துணை.

(ப - உ): கற்றிலன் ஆயினும் கேட்க - நூல்களைக் கற்றறியானாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றார் சொல்லக் கேட்க; அஃது ஒருவற்கு - அக்கேள்வி ஒருவனுக்கு; ஒற்கத்தின் - தளர்ச்சி வந்தவிடத்து; ஊற்று ஆம் துணை - பற்றுக்கோடாம் துணை. (ஊன்று என்பது ஊற்று என நின்றது.)

கேள்வி, ஒருவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்தில் ஊன்றுகோல்போன்ற துணையாதலின், ஒருவன் நூல்களைக் கற்றறியானாயினும் அவற்றின் பொருளைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்பானாக.

எவர் கூற்றிலிருந்தும் உண்மைப் பொருளை அறி

30. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

(வ - ந.): எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

(ப - உ): எப்பொருள் - யாதொரு பொருளை; யார் யார் வாய் கேட்பினும் - எவ்வெவர் வாயில் கேட்

டாலும்; அப்பொருள் - அப்பொருளினது; மெய்ப் பொருள் காண்பது அறிவு - மெய்யாகிய பயனைக் காண வல்லது அறிவு.

யாதொரு பொருளை எவர் எவர் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யாய பயனைப் பிரித்தறிய வல்லது அறிவு.

தீயவழியில் செல்லாது தடுப்பதே அறிவு

31. சென்ற இடத்தான் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

(வ - ந.): சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு.

(ப - உ): சென்ற இடத்தால் - (மனத்தை) அது போன கருமத்தில்; செலவிடாது - போகவிடாமல்; (அக் கருமத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து) தீது ஒரீஇ - தீயதிலிருந்து நீக்கி; நன்றின்பால் உய்ப்பது அறிவு - நல்லதினிடத்தே போகவிடுவது அறிவாம்.

மனத்தை அது சென்ற வழியே செல்லவிடாது கருமத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீதினின்றும் நீக்கி நல்லதின்கண் செலுத்துவதே அறிவு.

பழிநாணுவர் தாம் செய்த சிறு தவற்றையும் பெரிதாகக் கருதுவர்

32. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(வ - ந.): பழிநாணுவார் தினைத்துணை ஆம் குற்றம் வரினும் பனைத்துணை ஆ(க) கொள்வர்.

(ப - உ): பழிநாணுவார் - பழிக்கு அஞ்சுவோர்; தினைத்துணை ஆம் குற்றம் - தினையளவாகிய சிறிய குற்றமானது; வரினும் - (தம்மிடத்து) வந்தாயினும்; பனைத் துணை ஆக கொள்வர் - அதைப் பனையளவு பெரிதாக எண்ணுவர்.

பழியை அஞ்சுவார், தம்மிடத்துத் தினையளவு குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாக அன்றிப் பனையினளவாகக் கொண்டு அஞ்சுவர்.

இடித்துப் புத்திகூறும் துணைவரை உடைய அரசன் கெடான்

33. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

(வ - ந): இடிக்கும் துணையாரை ஆள்வாரை கெடுக்கும் தகைமையவர் யார்.

(ப - உ): இடிக்கும் - கோபித்துப் புத்திசொல்லும்; துணையாரை - துணையாம் தன்மைபுடையவரை; ஆள்வாரை - (இவர் நமக்குச் சிறந்தவர் என்று கொண்டு) ஆளும் அரசரை; கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் தகுதியுடைய பகைவர் (உலகத்தில்) யார் உளர்? (எவரும் இல்லை).

தீயன கண்டால் இடித்துச் சொல்வாரைச் சிறந்த துணைவராகக்கொண்டு ஆளும் அரசரைக் கெடுக்கும் தகுதியுடைய பகைவர் உலகத்தில் யார்?

பழகுவோர் நல்லவர்களாயிருத்தல் வேண்டும்

34. மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

(வ - ந.): மனநலம் நன்கு உடையர் ஆயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து.

(ப - உ): மன நலம் - மன நன்மை; நன்கு - (முன்னை) நல்வினையினாலே; உடையர் ஆயினும் - (தாமே) உடையராயிருந்தாலும்; சான்றோர்க்கு - (அந்நன்மை) நிறைந்தோர்க்கு; இனநலம் ஏமாப்பு உடைத்து - இன நன்மையானது (அதற்கு) வலிமையாதலை உடையது.

நல்வினையால் மன நன்மையைத் தாமே உடையராயினும், அந்நிறை குணமுடையவர்க்கு, பழகுவோரது நலம் வலிமையைக் கொடுக்கும்.

நன்றாக யோசித்துக் கருமத்தைத் தொடங்குக

**35.** எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

(வ - ந.): கருமம் எண்ணித் துணிக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.

(ப - உ): கருமம் - (செய்யத் தக்க) தொழிலை; எண்ணித் துணிக - (முடிக்கும் உபாயத்தை) ஆலோசித்துத் தொடங்குக; துணிந்த பின் - தொடங்கியபின்; எண்ணுவம் என்பது இழுக்கு - ஆராய்வோம் என்பது குற்றமாகும்.

ஒரு கருமத்தைச் செய்யத் தொடங்கியபின் ஆராய்வோம் என்பது குற்றமாதலால் தொழிலை ஆலோசித்தே துணிக.

தமது வலியறியாது தொடங்கிக் கெட்டவர் பலர்

**36.** உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

(வ - ந.): உடைய தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்.

(ப - உ.): உடைய - (ஒரு கருமத்துக்குத் தலைமை) உடையவர்; தம் வலி - தமது வலிமையினளவை; அறியார் - தெரிந்துகொள்ளாதவராகி; ஊக்கத்தின் - மன எழுச்சியால்; ஊக்கி - (தம்மின் வலியவரோடு போர் செய்ய) முயன்று; இடைக்கண் - (அவர் முறியடித்ததால் தாம் அது செய்து முடிக்கப் பெறாது) நடுவிலே; முரிந்தார் பலர் - (உலகத்தில்) கெட்டவர் பலராவர்.

ஒரு கருமத்திற்குத் தலைமை வகிப்பவர் தமது வலிமையின் அளவை அறியாது மன எழுச்சியால் தம்மின் வலியாரோடு போர் தொடங்கி அவரால் முறியடிக்கப்பட்டு இடையே கெட்டவர் உலகத்தில் பலராவர்.

காலமும் இடமும் அறிந்து செய்யின் உலகம் முழுவதையும் ஆளினும் ஆளலாம்

37. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின்.

(வ - ந.): காலம் கருதி இடத்தால்செயின் ஞாலம் கருதினும் கைகூடும்

(ப - உ.): காலம் கருதி - காலத்தை அறிந்து; இடத்தால் செயின் - இடத்தோடு பொருந்தச் செய்வானாயின்; ஞாலம் கருதினும் கைகூடும் - (ஒருவன்) பூமி முழுவதையும் (தானே ஆள) நினைத்தாலும் அது அநுகூலமாகும்.

செய்யும் தொழிலைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்யின், ஒருவன் உலக முழுவதையும் தான் ஆளக் கருதினும் அது கைகூடும்.

இடமறிந்து போர் செய்யின் வேறுதுணை வேண்டாம்

38. அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

(வ - ந): எஞ்சாமை எண்ணி இடத்தால் செயின் அஞ்சாமை அல்லால் துணைவேண்டா.

(ப - உ.): எஞ்சாமை - (அரசர் பகைவரிடத்தில் தொழில் செய்யும் விதங்களை எல்லாம்) குறையாமல்; எண்ணி - ஆலோசித்து; இடத்தால் செயின்-இடத்தோடு பொருந்தச் செய்வாராயின்; அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - (அச்செயலுக்குத் தமது) தைரியமல்லாமல் (வேறொரு) துணையும் வேண்டுவதில்லை.

பகைவரிடத்து வினை செய்யும் வகைகளை முற்றிலும் ஆராய்ந்து அவற்றை இடத்தோடு அரசர் செய்வாராயின் அச்செயலுக்குத் தமது தைரியத்தைத் தவிர வேறு துணை வேண்டுவதில்லை.

குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து
அதிகமானதைக்கொண்டு அறிக

39. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

(வ - ந.): குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்

(ப - உ.): குணம் - (குணம் குற்றம் இவற்றுள் ஒன்றை மாத்திரம் உடையவர் உலகில் இல்லாமையால்) குணங்களை; நாடி - ஆராய்ந்து; குற்றமும் நாடி - மற்றைக் குற்றங்களையும் ஆராய்ந்து; மிகைநாடி - மிகுந்தவற்றை ஆராய்ந்து; மிக்கக்கொளல் - மிகுந்தவற்றால் (அவரை) அறிவானாக.

ஒருவனது குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து குணம் அதிக மிருப்பின் குணமுடையவனென்றும், குற்றம் அதிக மிருப்பின் குற்றமுடையவ னென்றும் கொள்க.

இன்ன குணமுடையவனிடத்து
அரசனது நம்பிக்கை இருக்கும் என்பது

40. அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

(வ - ந.): அன்பு, அறிவு, தேற்றம், அவா இன்மை இந்நான்கும் நன்கு உடையான் கட்டே தெளிவு.

(ப - உ.): அன்பு-(அரசனிடத்து) அன்பும்; அறிவு-(அவனுக்கு ஆகவேண்டியவற்றை அறியும்) அறிவும்; தேற்றம் - (அவற்றைச் செய்யுமிடத்து) மனம் கலங்காமையும்; அவா இன்மை - (அவற்றால் பொருள்வரின் அதன்மேல்) ஆசை இன்மையும்; இந்நான்கும் - ஆகிய இந்நான்கு குணங்களையும்; நன்கு உடையான் கட்டே - நிலையாக உடையவனிடத்தே; தெளிவு - (அரசன்) நம்பிக்கை இருக்கும்.

அரசனிடத்து அன்பு, அவனுக்காக வேண்டியவற்றை அறியும் அறிவு, அவை செய்வதில் கலங்காமை; அவற்றால் பொருள்வரின் அதன்மேல் ஆசையின்மை ஆகிய இந்நான்கு குணங்களும் உடையவனிடத்திலேயே அரசனின் நம்பிக்கை இருக்கும்.

உறவினர் சூழ இருத்தல் செல்வத்தின் பயன்

41. சுற்றத்தான் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தான் பெற்ற பயன்.

(வ - ந.): செல்வம் பெற்ற பயன் சுற்றத்தால்தான் சுற்றப்பட ஒழுகல்.

(ப - உ.): செல்வம் - செல்வத்தை; பெற்றத்தால் - பெற்றதனால்; பெற்ற பயன் - (ஒருவன்) பெற்ற பிரயோசனமாவது; சுற்றத்தால் - (தன்) சுற்றத்தவராலே; தான் சுற்றப்பட - தான் சூழப்படும் வகை; ஒழுகல் - (அச்சுற்றத்தாரைத்) தழுவி நடத்தல்.

செல்வம் பெற்றதனால் ஒருவன் பெற்றபயன், தன் சுற்றத்தாரால் தான் சூழப்பட அவர்களைத் தழுவி நடத்தலாகும்.

மறதி உடையார்க்குச் செல்வத்தால் பயனில்லை

42. அச்சம் உடையார்க்கு அரணில்லை; ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

(வ - ந): அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை.

(ப - உ): அச்சம் உடையார்க்கு - (மனத்தில்) பயமுடையவர்களுக்கு; அரண் - (காடு மலை முதலாகிய) காவல்கள் (இருந்தாலும்); இல்லை - (அவற்றாலே) பயன் இல்லை; ஆங்கு - அதுபோலவே; பொச்சாப்பு உடையார்க்கு - மறதியுடையவர்க்கு; நன்கு இல்லை - செல்வம் எல்லாம் உடையராயிருந்தாலும் (அவற்றாலே) பயன் இல்லையாகும்.

காடு மலை முதலிய அரண்களுள்ளே நிற்பினும் மனத்தில் பயமுடையவர்களுக்கு அவற்றால் பயனில்லை; அது போல் செல்வமெல்லாம் உடையராயினும் மனத்தில் மறதி உடையவர்களுக்கு அவற்றால் பயனில்லை.

குடிகளைத் தழுவி நடக்கும் அரசனை உலகத்தவர் தழுவுவர்

43. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

(வ - ந.): உலகு, குடிதழீஇ கோல் ஓச்சும் மாநில மன்னன் அடி தழீஇ நிற்கும்.

(ப - உ.): உலகு - உலகத்தார்; குடிதழீஇ - தன் குடிகளையும் அணைத்துக்கொண்டு; கோல் ஓச்சும் - செங்கோலையும் செலுத்தும்; மாநில மன்னன் - பெரிய நில வேந்தனது; அடிதழீஇ நிற்கும் - அடியை அணைத்துக் கொண்டு விடாது நிற்பர்.

தன் குடிகளையும் அணைத்து, செங்கோலையும் செலுத்தும் பெருநில வேந்தன் அடியைத் தழுவி உலகத்தவர் விடாது நிற்பர்.

குடிகள் வருந்தினால் அரசன் செல்வம் கெடும்

44. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(வ - ந.): செல்வத்தைத் தேய்க்கும் படை, அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே.

(ப - உ.): செல்வத்தை - (அரசன்) செல்வத்தை; தேய்க்கும் - குறைக்கும்; படை - ஆயுதம்; (அரசன் நீதி செய்யாமையினாலோ) அல்லல்பட்டு - (குடிகள்) துன்பப் பட்டு; ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றோ.

அரசன் நீதி செலுத்தாமையால் குடிகள் துன்ப முற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரே அவன் செல்வத்தை அழிக்கும் ஆயுதம்.

கடுஞ் சொல்லுடைய அரசனின் செல்வம் விரைவில் கெடும்

45. கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

(வ - ந.): கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும்.

(ப - உ.): கடுஞ் சொல்லன் - (அரசன்) கடுஞ் சொல்லை உடையவனும்; கண் இலன் - கண்ணோட்டமில்லாதவனும்; ஆயின் - ஆனால்; நெடுஞ் செல்வம் - (அவனது) பெரிய செல்வமானது; நீடு இன்றி ஆங்கே கெடும் - நீடிக்காது அப்பொழுதே அழியும்.

அரசன் கடிய சொல்லுடையவனும் தாட்சணியமில்லாதவனுமாயின் அவனது பெரிய செல்வமும் நீடிக்காது அப்பொழுதே கெடும்.

மன உறுதியுடையோர், எடுத்த கருமம் கெடினும்
ஊக்கம் குன்றார்

46. சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர்; புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

(வ - ந.): களிறு புதை அம்பின் பட்டு பாடு ஊன்றும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார்.

(ப - உ.): களிறு - யானை; புதை அம்பின் - கட்டாகிய அம்பினாலே; பட்டு - (புண்) பட்டபொழுதும்; பாடு ஊன்றும் - (தளராமல் தன்) பெருமையை நிலை நிறுத்தும்; (அதுபோல); உரவோர் - மன எழுச்சியை உடையவர்; சிதைவிடத்து - (தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழிவு வந்தபொழுது; ஒல்கார் - தளராமல் தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

யானை அம்புமாரியால் புண்படுத்தப்பட்டபொழுதும் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல் ஊக்கமுடையார் தாம் கருதிய உணர்ச்சிக்குக் கேடு வந்தாலும் தளராது, தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

சோம்பலில்லாத அரசன் இவ்வுலகமுழுமையையும் பெறுவான்

47. மடியிலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

(வ - ந): மடிஇலா மன்னவன் அடி அளந்தான் தா அயது எல்லாம் ஒருங்கு எய்தும்.

(ப - உ): மடிஇலா மன்னவன் - சோம்பலில்லாத அரசன்; அடி - (தன்) அடியினது அளவினாலே; அளந்தான் - (எல்லா உலகங்களையும்) அளந்த திருமால்; தாயது எல்லாம் - கடந்த உலகப் பரப்பு முழுவதையும்; ஒருங்கு எய்தும் - ஒருமிக்க அடைவான்.

தனது பாதத்தினால் எல்லா உலகையும் அளந்த திருமால் கடந்த நிலப்பரப்பு முழுவதையும், சோம்பலில்லாத அரசன் ஒருங்கே அடைவான்.

முயற்சி, உடல் வருந்திய கூலியைத் தரும்

48. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(வ - ந): தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்.

(ப - உ): தெய்வத்தான் - (முயன்ற தொழில்) விதி வகையால்; ஆகாது எனினும் - (கருதிய பயனைத்) தராது ஆயினும்; முயற்சி - முயற்சியானது; தன் மெய் - தனது உடம்பு; வருத்தக் கூலிதரும் - (வருந்திய) வருத்தத்தின் அளவு கூலிதரும் (பாழாகாது).

முயன்ற தொழில் ஊழ்வசத்தால் கருதிய பயனைத் தராதாயினும், முயற்சி, உடம்பு வருந்திய அளவு கூலியைத் தரும்.

துன்பத்தை அடுத்து இன்பம் வரும்

49. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

(வ - ந.): இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்.

(ப - உ.): இடுக்கண் - (விதியால் தனக்குத்) துன்பமானது; வருங்கால் - வருமிடத்து; நகுக - (அதற்கு வருந்தாது) மனம் மகிழ்க; (ஏனெனில்) அதனை - அத் துன்பத்தை; அடுத்து ஊர்வது - மேலும் தொடர்ந்து வரத்தக்கது; அஃது ஒப்பது இல் - அம் மகிழ்ச்சி போல்வது (வேறே) இலது.

ஒருவன் துன்பம் வரும்போது அதற்கு வருந்தாது மகிழ்க; ஏனெனில் அதனைத் தொடர்ந்து வரத்தக்கது மகிழ்ச்சியே.

மந்திரியின் சிறப்புடைக் குணங்கள்

50. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

(வ - ந.): தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு.

(ப - உ.): தெரிதலும் - ஒரு கருமத்தை நன்றாக ஆராய்தலும்; தேர்ந்து செயலும் - அது முடியும் வகையை ஆராய்ந்து செய்தலும்; துணிந்து சொல்லலும்-சந்தேகத்துக்கு இடமில்லாமல் துணிந்து சொல்லுதலும்; வல்லது அமைச்சு - வல்லவனே மந்திரியாவான்.

ஒரு கருமத்தை ஆராய்தலினும், அதனை முடிக்கும் வகையைச் சிந்தித்துச் செய்தலினும், சந்தேகத்துக்கு இடமின்றித் துணிந்து சொல்லுதலினும் வல்லவனே மந்திரி ஆவான்.

பிறர் வெல்லமுடியாத சொல்லை ஆராய்ந்து சொல்லுக

51. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

(வ - ந.): சொல்லை வெல்லும் சொல் பிறிதோர் சொல் இன்மை அறிந்து அச்சொல்லை சொல்லுக.

(ப - உ.): சொல்லை - (தாம் சொல்லக் கருதிய) சொல்லை; வெல்லும் சொல் - வெல்லவல்ல சொல்லாகிய; பிறிது ஓர் சொல் - வேறொரு சொல்; இன்மை அறிந்து- இல்லாமையைத் தெரிந்து; அச்சொல்லை சொல்லுக - அச்சொல்லைச் சொல்லக் கடவர்.

தனது பேச்சைப் பிறரது பேச்சினால் வெல்ல முடியாதபடி திறமையாகப் பேசவேண்டும்.

நியவழியில் வந்தபொருள் பசுமட்கலத்து நீர்

52. சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்துஇரீஇ அற்று.

(வ - ந.): சலத்தால் பொருள் செய்து ஏமம் ஆர்த்தல் பசுமண் கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று.

(ப - உ.): சலத்தால் - தீத்தொழில்களால்; பொருள்செய்து - பொருள்களைச் சம்பாதித்து; ஏமம் ஆர்த்தல் - பாதுகாப்புச் செய்தல்; பசுமண்கலத்துள் - பச்சை மண்பாத்திரத்தில்; நீர்பெய்து - நீரை வார்த்து; இரீஇயற்று - அதற்குக் காப்பைச் செய்ததனோடு ஒக்கும்.

ஒருவன் தீவினைகளால் பொருளைச் சம்பாதித்து அதனைக் காப்புச் செய்தல், சூளையிலிடாத மண் பாத்திரத்தில் நீரைவிட்டு அதற்குப் பாதுகாப்பைச் செய்ததனோடொக்கும்.

மெய்வருத்தம் பாராது இன்பந் தரும் தொழிலைச் செய்க

53. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

(வ - ந.): துன்பம் உற வரினும் இன்பம் பயக்கும் வினை துணிவு ஆற்றி செய்க.

(ப - உ.): துன்பம் - (முதலில் உடல் முயற்சியால்) துன்பம்; உறவரினும் - (தமக்கு) மிக வரினும் (அது

கண்டு (தளராமல்); இன்பம் - மகிழ்ச்சியை; பயக்கும் வினை - (முடிவிலே) தருகின்ற தொழிலை; துணிவு ஆற்றி செய்க - வலிமையுடையராய்ச் செய்யக் கடவர்.

முதலில் உடல் முயற்சியால் தமக்குத் துன்பம் மிக வருமாயினும், அது நோக்கித் தளராது முடிவில் இன்பத்தை அளிக்கும் செயலை உறுதிப்பாட்டோடு செய்க.

தொழிலையும் பகையையும் குறையின்றி முடிக்கவேண்டும்

54. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

(வ - ந.): வினை பகை என்ற இரண்டின் எச்சம் நினையுங்கால் தீ எச்சம்போல தெறும்.

(ப - உ.): வினை - (செய்யத் தொடங்கிய) தொழிலும்; பகை - (அழிக்கத் தொடங்கிய) பகையும்; என்ற இரண்டின் - என்று சொல்லப்பட்ட இரண்டினது; எச்சம் - குறையும்; நினையுங்கால் - ஆராயுமிடத்து; தீ எச்சம்போல தெறும் - தீயினது குறைபோலப் (பின் வளர்ந்து) கெடுக்கும்.

முடிவுபெறாத தொழிலும் அடக்கப்படாத பகையும், அணைக்கப்படாத நெருப்பைப்போல் பின் வளர்ந்து கெடுக்கும்.

ஒருவன் மனக்கருத்தை அறியும் மந்திரி தெய்வத்தை ஒப்பான்

55. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

(வ - ந.): அகத்தது ஐயப்படாது உணர்வானை தெய்வத்தோடு ஒப்ப கொளல்.

(ப - உ.): அகத்தது - (ஒருவனது) மனத்தினிடத்து நிகழ்வதை; ஐயப்படாது - சந்தேகப்படாமல்; உணர்வானை - (துணிவாக) அறியவல்லவனை; தெய்வத்தோடு ஒப்ப - (மனிதனே ஆயினும்) தெய்வத்துக்குச் சமமாக; கொளல் - மதிக்கக்கடவன்.

ஒருவனின் மனத்தில் இருப்பதை உள்ளபடி அறிய வல்லவனை மனிதனுயினும் தெய்வத்தோடொப்ப நன்கு மதிக்க.

சபையை அறிந்து பேசவேண்டும்

56. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

(வ-ந.): சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக.

(ப-உ.): சொல்லின் தொகை-சொல்லின் திறமை; அறிந்த - தெரிந்த; தூய்மையவர் - பரிசுத்த குணமுடையவர்; (தாம் ஒன்று சொல்லும்போது) அவை-(அப்பொழுதுள்ள) சபையை; அறிந்து ஆராய்ந்து - தெரிந்து ஆராய்ச்சி செய்து; சொல்லுக-சொல்லுவாராக.

பேச்சைத் திறமையாகப் பயன்படுத்த அறிந்த தூய்மையுடையவர்கள் தாம் பேசும் சபையை அறிந்து பேசுதல் வேண்டும்.

அரசனுக்கு வேண்டும் வரிப்பொருளைக் கொடுப்பது சிறந்த நாடு

57. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு.

(வ-ந.): நாடு பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது.

(ப-உ.): நாடு - நாடாவது; பொறை - (பிறநாடுகள் சுமந்த) பாரமெல்லாம்; ஒருங்கு - ஒன்று சேர; மேல் வருங்கால் - (தன்மேல்) வரும்போது; தாங்கி - (அவற்றை) தாங்கி; இறைவற்கு - (அதன்மேலும் தன்) அரசனுக்கு; இறை ஒருங்கு நேர்வது - இறைப்பொருள் முழுவதையும் உடன்பட்டுக் கொடுப்பதே.

பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்னிடம் வரும்போதும் அவற்றைத் தாங்கித தன்னரச

னுக்கு வரிப்பொருள் முழுவதையும் உடன்பட்டுக் கொடுப்பதே நாடு.

இயமன் வரினும் எதிர்ந்து நிற்கவல்லதே படை

58. கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை.

(வ - ந.): படை, கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல் அதுவே.

(ப - உ): படை - சேனையாவது; கூற்று - இயமன்; உடன்று மேல்வரினும் - கோபித்து எதிர்த்து வரினும்; கூடி - மனமொத்து; எதிர் நிற்கும் ஆற்றல் அதுவே - எதிர் நின்று போர் செய்யும் மனவலிமையுடையதே.

இயமனே கோபித்து எதிர்த்து வந்தாலும் மனம் ஒத்து எதிர் நின்று போர் செய்தலை உடையதே படையாகும்.

பகைவன் வேலெறியக் கண்ணை இமைப்பினும் தோல்வியாகும்

59. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்
ஒட்டுஅன்றோ வன்கண் அவர்க்கு ?

(வ - ந.): விழித்த கண் வேல்கொண்டு எறிய, அழித்து இமைப்பின் வன்கண் அவர்க்கு ஒட்டு அன்றோ.

(ப - உ.): விழித்த கண் - (பகைவரை) கோபித்துப் பார்த்த கண்; வேல்கொண்டு - அவர் வேலைக்கொண்டு; எறிய - வீச; அழித்து - (அதற்குப் பொறுமல் அப்பார்வையை) மாற்றி; இமைப்பின் - இமைக்குமாயின்; (அவ்விமைத்தல்) வன்கண் அவர்க்கு - வீரர்க்கு; ஒட்டு அன்றோ - தோல்வியாகும்.

பகைவரைக் கோபித்துப் பார்த்த கண், அவர் வேல்கொண்டெறிய அப்பார்வையை மாற்றி இமை கொட்டுமாயின், அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாகும்.

முகம் மலர்வது நட்பன்று; அகமும் மலர வேண்டும்

60. முகம்நக நட்பது நட்புஅன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு.

(வ - ந.): முகம் நக நட்பது நட்பு அன்று; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு.

(ப - உ.): முகம் நக - (கண்ட இடத்து) முகம் மட்டும் மலரும்படி; நட்பது - சிநேகிப்பது; நட்பு அன்று - சிநேகமன்று; நெஞ்சத்து அகம் நக - (அன்பால்) உள்ளம் மலர; நட்பது நட்பு - சிநேகிப்பதே சிநேகம்.

கண்டவுடன் முகம்மட்டும் மலரும்வகை சிநேகிப்பது நட்பாகாது; அன்பால் உள்ளம் மலர நட்பதே நட்பாகும்.

ஆபத்தில் கைவிடுவார் நட்பை விடுக

61. உள்ளற்க வுள்ளம் சிறுகுவ; கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.

(வ - ந.): உள்ளம் சிறுகுவ உள்ளற்க; அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்பு கொள்ளற்க.

(ப - உ.): உள்ளம் - (தம்) மன எழுச்சி; சிறுகுவ - சுருங்குவதற்குக் காரணமாய தொழில்களை; உள்ளற்க - (செய்ய) நினையாதிருக்கக் கடவர்; (அதுபோல), அல்லற்கண் - (தமக்கொரு) துன்பம் வந்த இடத்து; ஆற்று அறுப்பார் - கைவிடுவோரது; நட்பு கொள்ளற்க - சிநேகத்தைக் கொள்ளாதொழிக.

தம் ஊக்கம் குறைதற்குக் காரணமாகிய தொழில்களைச் செய்ய நினையாதொழிக; அதுபோல் தமக்குத் துன்பம் வந்த இடத்துக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாது ஒழிக.

பழைய நட்பினர், நண்பர் அழிவு தருவன செய்யினும் பொறுப்பர்

62. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(வ - ந.): அன்பின் வழிவந்த கேண்மையவர் அழிவந்த செய்யினும் அன்பு அறூர்.

(ப - உ.): அன்பின் - அன்புடனே; வழி வந்த - பழைமையதாய் வந்த; கேண்மையவர் - நட்பினையுடையவர்; அழிவந்த செய்யினும் - அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும்; அன்பு அறூர் - (அவரிடத்தே) அன்பு நீங்கார்.

பழைமையாய் வந்த நட்பினை உடையவர் தமக்கு நண்பர் அழிவு தருவனவற்றைச் செய்தாராயினும், அவரிடம் அன்பு குன்றூர்.

ஆபத்தில் கைவிடும் நண்பரில் தனிமை நன்று

63. அமர்அகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னூர்
தமரின் தனிமை தலை.

(வ - ந): அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லாமா அன்னூர் தமரின் தனிமை தலை.

(ப - உ.): அமர் அகத்து - போரிலே; ஆற்று அறுக்கும்-(போர்க்களத்திலே) தள்ளிவிட்டுப் போகின்ற; கல்லா மா அன்னூர் - பயிற்சி பெறாத குதிரை போன்றவரது; தமரின் - நட்பிலும் பார்க்க; தனிமை தலை - தனிமையாயிருத்தலே சிறப்புடையது.

போர் வருமுன் தம்மைத் தாங்குவது போலிருந்து, போர் வந்த இடத்துக் களத்தில் தள்ளிவிட்டுப் போகும் பழகாத குதிரை போல்வாரது நட்பைக் காட்டிலும் தனித்திருத்தல் நல்லது.

பகைவர் வணக்கம் வில்வளைவது போன்று தீமையுடையது

64. சொல்வணக்கம் ஒன்னூர்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

(வ - ந.): வில் வணக்கம் தீங்கு குறித்தமையான் ஒன்னூர்கண் சொல்வணக்கம் கொள்ளற்க.

(ப - உ.): வில் வணக்கம் - வில்லினது வளைவு; தீங்கு குறித்தமையான் - தீமை செய்தலைக் குறித்தமையால்; ஒன்னார்கண் - பகைவரிடத்தே (பிறக்கும்); சொல் வணக்கம் கொள்ளற்க - சொல்லினது வணக்கத்தையும் (நமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று) நினையாதிருக்கக்கடவர்.

வில்லினது வளைவு தீமை செய்தலைக் குறிக்கும். பகைவரின் வணங்கிய சொற்களும் வில் வளைவு போன்றன. ஆகவே, அவற்றை ஏற்றுக்கொள்ளல் ஆகாது.

குடிப்பிறந்தார் குணங்கள் மூன்று

65. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

(வ - ந.): குடிப்பிறந்தார், ஒழுக்கமும், வாய்மையும், நாணும் இம்மூன்றும் இழுக்கார்.

(ப - உ.): குடிப்பிறந்தார் - உயர் குடியிற் பிறந்தார் (தமக்குரிய); ஒழுக்கமும் - நன்னடையும்; வாய்மையும் - மெய்மையும்; நாணும் - (பழிபாவங்களுக்கு) நாணுதலும் ஆகிய; இம்மூன்றும் - இம்மூன்றினிடத்தும்; இழுக்கார் - வழுவார்.

உயர்ந்த குடியிற் பிறந்தவர் நல்ல ஒழுக்கம், மெய் பேசுதல், பழிபாவங்களுக்கு அஞ்சுதல் முதலிய இம் மூன்றிலிருந்தும் தவறார்.

உயர்குடிப்பிறந்தார் சிறிது தவறு செய்யினும் தாழ்வர்

66. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

(வ - ந): குன்றுவ குன்றி அனையசெயின் குன்றின் அனையாரும் குன்றுவர்.

(ப - உ.): குன்றுவ - தாழ்தற்கேதுவாகிய செயல்களை; குன்றி அனைய செயின் - ஒரு குன்றி மணி அளவா

யினும் செய்தால்; குன்றின் அனையாரும் குன்றுவர் - (குடிப்பிறப்பால்) மலைபோல் உயர்ந்தவரும் தாழ்வர்.

தாழ்தற்கேதுவாகிய செயல்களை ஒரு குன்றிமணி அளவேனும் செய்வாராயின் குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்தவரும் தாழ்வர்.

பெரியார் வறியாராயினும் அரிய செயல்களை முடிப்பர்

67. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

(வ - ந): பெருமையுடையவர் அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவர்.

(ப - உ): பெருமையுடையவர்-பெருமை உடையவராயினோர்; (தாம் வறியராயபோதும்), அருமை உடைய - பிறராலே செய்தற்கு) இயலாத; செயல் - செயல்களை; ஆற்றின் - அவை செய்யும் முறையில்; ஆற்றுவர்-(முடிவு பெற) செய்யவல்லவராவர்.

பெருமையுடையார் தாம் வறியராயபோதும், பிறரால் செய்தற்கரிய செயல்களை விடாது, அவை முடிவடையும்படி செய்வர்.

நிறைகுணமுடையவர் குணம் மாறுபடார்

68. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

(வ - ந.): சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் ஊழி பெயரினும் தாம் பெயரார்.

(ப - உ): சான்றாண்மைக்கு-நிறையுடைமையாகிய (கடலுக்கு); ஆழி எனப்படுவார் - கரை என்று சொல்லப்படுவார்; ஊழி பெயரினும் - (கடலும் கரையுள் நில்லாமல் உலகம் அழிகின்ற காலத்தில்) காலம் வேறுபட்டாலும்; தாம் பெயரார் - தாம் வேறுபடார்.

நற்குணம் என்று சொல்லும் கடலுக்குக் கரை எனப்படும் பெரியார், கடல் கரையுள் நில்லாது காலம் வேறுபட்டாலும் தாம் அறநெறியிலிருந்து விலகார்.

குடும்பத்தை உயர்த்த முயல்வானுக்குத் தெய்வம் துணைசெய்யும்

69. 'குடிசெய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந்து உறும்.

(வ - ந.): குடிசெய்வல் என்னும் ஒருவற்கு தெய்வம் தான் மடிதற்று முந்துறும்.

(ப - உ.): குடிசெய்வல் என்னும் - (என்) குடியினை உயரச் செய்வேன் என்று கொண்டு (அதற்கேற்ற கருமங்களில் முயலுகின்ற); ஒருவற்கு - ஒருவனுக்கு; தெய்வம் தான் மடிதற்று முந்துறும் - தெய்வமானது தானே உடையை இறுக உடுத்திக்கொண்டு முன்னே நிற்கும்.

என்குடியை உயரச் செய்வேன் என்று கொண்டு அதற்கேற்ற கருமங்களில் முயலும் ஒருவனுக்குத் தெய்வம், தானாகவே ஆடையை இறுக்கி உடுத்திக்கொண்டு வழிகாட்ட முன்னே நிற்கும்.

யாம் வறியம் என்பாரைக்கண்டு பூமாதேவி சிரிக்கும்

70. இலம்என்று அசைஇ யிருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

(வ - ந.): இலம் என்று அசைஇ இருப்பாரை காணின் நிலம் என்னும் நல்லாள் நகும்.

(ப - உ.): இலம் என்று - (தம்மிடம்) பொருளில்லை என்று சொல்லி; அசைஇ இருப்பாரை - சோம்பி இருப்பவரை; காணில் - கண்டால்; நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகள் என்று உயர்த்திச் சொல்லப்படும் நல்லவள் (தன்னுள்ளே) சிரிப்பாள்.

தம்மிடம் பொருளில்லை என்று சொல்லிச் சோம்பி இருப்பாரைக்கண்டால் நிலமகள் தன்னுள்ளே சிரிப்பாள்.

# அருஞ் சொல் அகர வரிசை

அசைஇ - சோம்பி
அடி அளந்தான் - திருமால்
அமைச்சு - மந்திரி
அரண் - காவல்
அல்லல் - வருத்தம்
அவையத்து-சபையிடத்து
அனிச்சம் - ஒருவகைப்பூ
அனையர் - ஒப்பவர்
ஆகுலம் - ஆரவாரம்
ஆக்கம் - செல்வம்
ஆழி - கரை
ஆற்றல் - வலிமை, தணித்தல், ஒத்தல்
ஆற்றறுத்தல் - கைவிடுதல்
ஆற்றுவார் - வலியவர்
இகழ்ந்து - நீங்கி
இடுக்கண் - துன்பம்
இழுக்கு - குற்றம்
இறப்பு - தீமை
இறை - கடவுள், அரசன், வரிப்பொருள்
இன்னா - இனிமையில்லாதது
உடன்று - கோபித்து
உய்ப்பது - செலுத்துவது
உவகை - மகிழ்ச்சி
உற - மிக
ஊக்கம் - மனஎழுச்சி
ஊர்வது - வருவது
ஊழி - உலக முடிவு
ஊற்று - ஊன்று, பற்றுக்கோடு
எச்சம் - குறை
ஏகினன் - சென்றான்
ஏமம் - பாதுகாப்பு
ஒட்ட - பொருத்த
ஒப்புரவு - உபகாரம்
ஒரீஇ - நீக்கி
ஒல்குதல் - சுருங்குதல்
ஒழுகல் - நடத்தல்
ஒறுத்தல் - தண்டித்தல்
ஒற்கம் - தளர்ச்சி
ஒன்னார் - பகைவர்
ஓட்டு - புறங்கொடுத்தல்
கட்டு - இடத்து
கவர்தல் - உண்ணல்
களவு - வஞ்சகம்
காட்சி - அறிவு
காதல் - விருப்பம்
குன்று - மலை
கூற்று - இயமன்
கேண்மை - உறவு
கைகூடும் - அனுகூலமாகும்
கொல்லும் - கெடுக்கும்
சலம் - தீமை
சுடும் - வருத்தும்
செய்கலாதார் - செய்யமாட்டாதவர்
சோகாப்பர் - துன்பமடைவர்
ஞாலம் - உலகம்
தகைமை - பெருமை
தாய - அளந்த
திரிந்து - மாறுபட்டு

துன்னுதல் - செய்தல்
தெறுதல் - அழித்தல்
தேற்றம் - கலங்காமை, தெளிவு
தொகை - கூட்டம், தகுதி
நகை - மலர்ச்சி
நயம் - நன்மை
நன்றி - உதவி
நாடி - ஆராய்ந்து
நீட்டல் - சடைவளர்த்தல்
படை - ஆயுதம்
பண்பு - குணம்
பயன் - பிரயோசனம்
பாடு - பெருமை
புதை - கட்டு
புலம் - புலன்கள்
மடி - சோம்பல்
மலர் - பூ
மழித்தல் - மொட்டையடித்தல்
மறம் - பாவம்
மாசு - குற்றம்
மாடு - செல்வம்
மாண் - பெருமை
மிகை - அதிகம்
மிசை - மேல்
முரிதல் - கெடுதல்
மோப்ப - மோந்தபொழுது, முகர
யா - எல்லாம்
விருந்து - புதுமையாக வந்தவர்
வெஃகுதல் - ஆசைப்படுதல்
வையகம் - உலகம்

PUBLIC LIBRARY
28 JAN 1956